Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-28 | 12-01-2005 | புதன்கிழமை | ஓசை -329




# மெல்பேர்ன் துடுப்பாட்டப் போட்டி நிதி கிறிஸ்தவ அமைப்பினருக்கு வழங்கப்படுகின்றதா?

## பேரினவாத சக்திகள் கடும் ஆட்சேபம்

**ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் நடத்தப்பட்ட துடுப்பாட்டம் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி உதவியானது உலக தரிசன நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படுவது குறித்து ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.**

சேகரிக்கப்பட்ட நிதி, மதசார்பு அமைப்புக்களுக்கு வழங்கப்படுவது ஏற்புடையதல்ல என்றும் இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன. மெல்பேர்ன் துடுப்பாட்டப் போட்டிகளில் சேகரிக்கப்பட்ட நிதி உதவியானது உலக தரிசனம் அமைப்பினூடாகவழங்கப்படுவது குறித்து தமது கட்சி அதிருப்தி கொண்டுள்ளதாக ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு பணிகளுக்கான அனைத்து கட்சிகளின் கூட்டத்தில் அவர் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். இந்த நிதியில் எவ்வளவு தொகை சிறிலங்காவுக்கு வழங்கப்படும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தளபதி கேணல் சொர்ணத்தை கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்திப்பு

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்ட் புறூவ்ஹொவ்டே நாளை வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத்தளபதி கேணல் சொர்ணத்தைச் சந்திக்கின்றார். இச்சந்திப்பு, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்கு-சம்பூரில் உள்ள அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெறும் என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. கேணல் சொர்ணம்,விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதியாக பதவி யேற்ற பின்னர், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரைச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் திருமலை வருகின்றார். (25)

## நிதியுதவிகளைப் பயன்படுத்தும்முறை வெளிப்படையாக இருக்க வேண்டும்

### உலகவங்கி வலியுறுத்து

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கைக்கு கிடைக்கும் சர்வதேச உதவிகளைப் பயன்படுத்தும் முறைகள் வெளிப்படையாக இருக்கவேண்டிய அவசியத்தை உலக வங்கி வலியுறுத்தியுள்ளது.

கிடைக்கப்பெறும் சர்வதேச நிதியுதவிகளின் விபரங்கள், அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பன வெளிப்படையாக அமைய வேண்டுமென உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் பீற்றர்ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தத்தால் முல்லை வலயத்தில் 300 மாணவர்கள் பலியாகியிருக்கலாம் என அச்சம்

சுனாமி கடற் கொந்தளிப்பால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு கல்வி வலையத்தில் 300இற்கு மேற்பட்ட மாணவர்கள் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் 113 மாணவர்களின் பெயர் விபரங்கள் கிடைத்துள்ளதெனவும் இரண்டு ஆசிரியர்கள் பலியாகியுள்ளனர் எனவும் முல்லைவலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா தெரிவித்துள்ளார். இறுதியான புள்ளி விபரங்களின்படி முல்லை மகாவித்தியாலயத்தில் 865 மாணவர்களும், கள்ளப்பாடு பாடசாலையில் 216 மாணவர்களும்,முல்லை கொன்வன்ற் பாடசாலையில் 476 மாணவர்களும் கல்விகற்று வந்துள்ளார்கள். மரணமான மாணவர்களின் முழுமையான விபரங்களை உடனடியாகப் பெறமுடியா ஓர் சூழ்நிலை உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உளரீதியான பாதிப்பிலிருந்து விடுபட ஒருவருடமாவது தேவையாக இருக்கலாம்!

### -வைத்திய கலாநிதி எழுமதிகரிகாலன்

சுனாமி அலையின் தாக்கத்தினால் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் தாக்கத்திலிருந்து மீள்வதாயின் ஏறத்தாழ ஒரு வருடமாவது எடுக்கும். இவ்வாறு வைத்தியர் எழுமதி கரிகாலன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள சர்வதேச மனித உரிமைகள் செயலகத்தில் நடைபெற்ற உளவளம் சார் ஒன்று கூடலின் பின்பு ஊடகத்திற்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு மாகாண மக்கள் ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்டு அதன்போதும் பல

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மட்டு – அம்பாறை மாவட்டங்களில் அமெரிக்க இராணுவத்தினர்!

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் அமெரிக்க இராணுவத்தினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். இதற்காக நூற்றுக்கு மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் அந்த மாவட்டங்களில் நிலைகொண்டுள்ளார்கள்.

இதனைத்தவிர இந்திய இராணுவத்தினர் தற்போது திருகோணமலையிலும், பிரித்தானிய இராணுவத்தினர் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் நிவாரணப் பணிகளுக்காக நிலைகொண்டுள்ளார்கள்.

இதேவேளை கனேடிய இராணுவப் பொறியியலாளர் மற்றும் மருத்துவ குழுவைச் சேர்ந்த 200 பேர் கொண்ட குழுவொன்று அம்பாறை ,யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

# மனிதாபிமான உதவிபுரிய வந்த நாடுகளை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகளும் தென்னாசியாவின் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளிலும் மனிதாபிமான உதவிகளைப் புரிய வந்தவர்கள் என்ற அடிப்படையில்தான் பார்க்கிறோம். இதை நாம் தவறான கண் ணோட்டத்தில் பார்க்க வேண்டிய தேவை இந்தக் கட்டத்தில் இல்லை என்று நான் கருதுகிறேன்.

இவ்வாறு சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

தென்னாசியாவில் ஏற்பட்ட ஆழிப் பேரலையிலிருந்து இலங்கைத் தீவகம் மீள்வதற்குப் பல நாடுகள் உதவிபுரிய முன்வந்துள்ளன. அந்த வகையில் பல நாடுகள் பல விதமான உதவிகளைப் புரிந்து வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, வங்கதேசம், கனடா போன்ற நாடுகளும் மீட்புப் பணிக்கான தங்களின் இராணுவ, விஞ்ஞான உதவிகளை ஒரு மனிதாபிமான நோக்கோடு செய்து வருகின்றன என்று நாம் கருதுகின்றோம்.

உலக நாடுகள் மனிதாபிமான உதவிகளை விரைந்து உதவுவது இயற்கைப் பாதிப்பு நேரத்தில் சர்வதேச ரீதியில் வழமையானது. அந்த நிலையோடு தான் இன்றைய நிலையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறோம்.

ஒரு ஒருமைப்பாடு, இணக்கப்பாடு என்பது தனித்தனியே ஏற்படுகின்ற இணைவு. மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்கின்ற எல்லோரும் தந்த அணுகுமுறை இங்கு சிதறடிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

கரடிப்போக்குச்சந்தியிலிருந்து300 மீற்றர் தூரத்தில் கணேசபுரத்தில் அமைந்துள்ள அரை ஏக்கர் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டியது சுடர் நிலவு பல்பொருள்வாணிபம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. தகவல் க.மார்க்கண்டு. (5544)


## கற்கைச் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்று முதல் கற்கைச் செயற்பாடுகள் யாவும் ஆரம்பிக்கப் பெறவுள்ளதெனவும். கல்லூரி மாணவர்களுக்கு கிளி.மத்திய கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். (சோ)

# 'சுனாமி' யால் பாதிக்கப்பட்டோரை அடையாளம் காணும்பணி தொடர்கிறது

## கிழக்கு பல்கலை துணை வேந்தர் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களைப் பல்வேறு வகையில் அடையாளம் காணும் பணி. பல்கலைக்கழக மாணவர்களாலும், விடுதலைப் புலிகளாலும் வாகரை தொடக்கம் துறைநீலாவணை வரையும் துரிதமாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். ரவீந்திரநாத் தெரிவித்துள்ளார்.

கடந்த5ஆம்திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட இப் பணியின் போது இறந்தவர்கள், உடமை சேதம், பாதிக்கப்பட்ட தன்மை, காணாமல் போனோர் உட்பட பல்வேறு தரப்பட்ட விடயங்கள்சேகரிககப்பட்டு வருகின்றது. இப் பணி முழுமையாக இம்மாதம் 20ஆம் திகதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பணி முடிவுற்றதும் நீலாவணை தொடக்கம் பாணமை வரையிலான மதிப்பீட்டுப்பணி தொடரும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

# நாயுடன் மோதிய உந்துருளி உழவு இயந்திரத்துடனும் மோதியது

### - உந்துருளியில் சென்றவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

ஊந்துருளியும், உழவு இயந்திரமும் மோதிக்கொண்டதில் ஊந்துருளியில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கருகாமையில் முன்னால் சென்று கொண்டிருந்த மணல் ஏற்றிய உழவு இயந்திரம் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்திற்குத் திரும்பிய வேளை பின்னால் வந்து கொண்டிருந்த உந்துருளி நாயுடன் மோதுண்டு உழவு இயந்திரத்துக்குள் பாய்ந்தது.

இதன்போது உந்துருளி பலத்த சேதங்களுக்கு உள்ளானதுடன் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

காயமடைந்தவர் கிளி.அம்பாள் குளத்தச் சேர்ந்த கணேசமூர்த்தி இளங்கோபன் (வயது 22) என்பவராவார். மேலதிக விசாரணைகளைத் தமிழீழக் காவல்துறையினரின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு.ச)

## விபரம் தரக்கோரல்

சுனாமி அனர்த்தம் காரணமாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், அவரைச்சார்ந்தோர் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய தகவல்களைப் பின்வரும் முகவரிக்கு உடனடியாக அறியத்தரக் கோரப்பட்டுள்ளது. உதவிப் பதிவாளர்,நலச்சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். தொலைபேசி:- 021-2226716.

## - சுனாமியால் பாதிக்கப்பட்ட - முல்லைத்தீவுப் பகுதிகளை கல்வி அதிகாரிகள் பார்வையிட்டனர்

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு வடக்குக், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், தியாகலிங்கம் உதவிக் கல்விப்பணிப்பாளர் கிருஸ்ணகுமார், பாடசாலைகள் வேலைப் பணிப்பாளர் ஆண்டியப்பு மற்றும் மத்திய கல்வி அமைச்சின் மேலதிக கல்விப் பணிப்பாளர் தில்லை நடராசா, முன்னாள் பரீட்சை ஆணையாளரும், தற்போதைய கல்வி அமைச்சின் ஆலோசகருமான அமரக்கோன் ஆகியோர்களுடன் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா ஆகியோர் அடங்கிய குழுவினர் சென்று அழிவுகளைப் பார்வையிட்டுள்ளனர். (08)

# தரமான விதை உற்பத்திக்காக மன்னாரில் பயிற்சி வகுப்பு

மன்னார் மாவட்டத்தின் தரமான விதை உற்பத்திக்கான பயிற்சி வகுப்பு நேற்றுக் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை விவசாய ஆராய்ச்சி நிலையம் முருங்கனில் நடைபெற்றது. இப் பயிற்சி வகுப்பிற்கு 80 பேர் வரையில் கலந்து கொண்டனர். இப்பயிற்சியானது இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தரமான விதை உற்பத்தியினை புனருத்தாரணம் செய்யும் இத்திட்டம் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனத்தின் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இவ்வகுப்பிற்கு மன்னார் மாவட்டத்தின் கமக்கார அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் ஏனைய நிறுவனங்களைச் சார்ந்த விதை உற்பத்தியாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் நீக்கிலாப்பிள்ளை, நிறுவனத்தின் அதிபர், வீரசிங்கம் பயிற்சி இணைப்பாளர் காமினி சில்வா, மன்னார் மாவட்ட இணைப்பாளர் சிவலிங்கம் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பாலசுப்பிரமணியம், வவுனியா உதவி விவசாயப்பணிப்பாளர் சதீஸ்வரன், மன்னார் மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் ஹீசைன், வடபிராந்திய ஆராய்ச்சி பிரதிப்பணிப்பாளர் தர்மராஜா மற்றும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மன்னார் பிரதேச இணைப்பாளர் றெஜீ ஆகியோரும் பயிற்சிப்பட்டறைக்கு வருகை தந்திருந்தனர்.

## கலந்து கொள்க

பொருத்தமற்ற நியமனங்கள் வழங்கப்பட்ட முல்லை மாவட்ட பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதால் மூன்று மாத கால பயிற்சி பெற்ற (111) பட்டதாரிகளையும் தவறாது சமூகம் தருமாறு பாதிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்கள் கேட்டுக்கொள்கின்றார்கள். (08,20)

## பிற்போடல்

ஜீ.ரி.சற் வன்னிக் கல்விப் புனருத்தான செயற்றிட்டத்தினரால் 2002,2003ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆங்கில வகுப்பில் சித்தியடைந்தவர் களுக்கான கற்பித்தல் முறைப் பயிற்சி வகுப்பும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஏற்கனவேஅறிவிக்கப்பட்டவாறு இன்று,நாளை14 ஆம் திகதிகளில் இடம்பெறமாட்டாது எனவும்,24,25 ஆம் திகதிகளில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையங்களில் நடைபெறும் என ஜீ.ரி.சற் வன்னி கல்விப் புனருத்தாரண செயற்றிட்ட நிர்வாக உத்தியோகத்தர் சு. தர்மரட்ணம் அறியத்தருகின்றார்.

## -சுனாமி அனர்த்தத்தின் பின்- தாளையடிப் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட அ. அட்டைகள்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தையடுத்து தாளையடிப்பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சில தேசிய அடையாள அட்டைகள்,கடற்றொழில் அடையாள அட்டை, வங்கிப்புத்தகம் என்பன கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம் அவற்றின் விபரம் வருமாறு :- குமரையா சுமங்கலா உடுத்துறை தாழையடி (தே.அ.அ.இல: 866732736V) ,இராமுவைரமுத்து உடுத்துறை தாளையடி (தே.அ.அ.இல: 891620039V),குணசேகரம் கமலாதேவி ஆழியவளை தாழையடி(தே.அ.அ.இல:697393641V), தவராசா புஸ்பராசாவத்திராயன் வடக்கு (தே.அ.அ.இல: 733360844V), புஸ்பராசா ஜெயலலிதா ஆழியவளை, தாழையடி (தே.அ.அ.இல 735944797V) அரும் பெரும்சோதி அரும்பெரும் குரு உடுத்துறை தாளையடி (தே.அ.அ.இல: 830415017V), சகுந்தலாதேவி ஐக்கியதீபம் உடுத்துறைதாளையடி (தே.அ.அ.இல: 535493456V), இராசேந்திரம் பிறேமலதா உடுத்துறை, தாழையடி (தே.அ.அ.இல: 795464360X), இலட்சுமிபிள்ளை முருகுபிள்ளை உடுத்துறை மேற்கு (தே.அ.அ.இல: 315540011ஏ), இலட்சுமிபிள்ளை முருகுபிள்ளை (முதியோர் அட்டை),அரும்பெரும் சோதி உடுத்துறை தாளையடி (மீனவ அடையாள அட்டை J.A 531),முருகுபிள்ளை இராஜேந்திரம் உருத்துறை வடக்கு தாளையடி (மீனவ அட்டை),விக்கினேஸ்வரன் (இலங்கை வங்கி யாழ்ப்பாணம் வங்கிப்புத்தகம்),மடுத்தீன் அந்தோனிஜூட் நெளுக்குளம் வவுனியா(கொமர்சல் வங்கி புத்தகம்) (சோ)

## வாள் வெட்டில் 4 பேர் படுகாயம்

யாழ்- நகர பேருந்துகள் தரிப்பிடப்பகுதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற குழு மோதல் ஒன்றில் 4 இளைஞர்கள் வாள் வெட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகமாலையில் இருந்து யாழ. வந்த பேருந்தில் பயணம் செய்த பெண் ஒருவருடன் தகாத முறையில் நடந்து கொண்ட சம்பவம் ஒன்றை அடுத்து சம்பந்தப்பட்ட பெண்சார்ந்தவர்களுக்கும், பெண்ணுடன்தகாதமுறையில் அணுகியவர்களுக்குமிடையில் இடம் பெற்ற குழு மோதலினால் இவ் வாள் வெட்டு இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. (32)

## சிப்பாய் தற்கொலை

செட்டிபாளையம் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத்தற்கொலை செய்துள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

காதல் விவகாரம் ஒன்றின் காரணமாகவே இவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவரது சடலம் நேற்றுமுன்தினம் மாலை களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்திய சாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.


### இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முல்லைத்தீவு மாவட்ட வாடிக்கையாளர்களுக்கான

## முக்கிய அறிவித்தல்

மேற்படி நிறுவனத்தில் வாடிக்கையாளர்களாக உள்ளவர்கள் கடந்த 26.12.2004 இல் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பில் சிக்கி மரணமடைந்திருப்பின் அல்லது பாதிப்புக்கு உள்ளாகியிருப்பின் தங்களுக்கான இழப்பீடுகள் உடன் வழங்கப்பட உள்ளன.எனவே பாதிக்கப்பட்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

*தொடர்பு முகவரி:-*
**பிள்ளையார் பல்பொருள் வாணிபம்**
**புதுக்குடியிருப்புச் சந்தி,**
**புதுக்குடியிருப்பு.**

தங்கள்
வெளிக்கள உத்தியோகத்தர்,
க.விமலதாஸ் (சசி)

(5092)



### சிங்கள மொழி வகுப்பு

## புதிய பிரிவு ஆரம்பம்

**15.01.2005**

**(சனிக்கிழமை) பி.ப.4.00**

வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் 4 தொடக்கம் 5.30 மணிவரை நடைபெறும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். குறிப்பு:- மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பி.எஸ்.ரி. தொழில் நுட்பம்**
**கச்சேரி அருகாமை,**
**கிளிநொச்சி.**


(5548)



### தவறிவிட்டது

இராஜநாயகம் இராஜசேகர் என்பவருடைய குடும்ப அட்டை கிளிநொச்சி தண்ணீர்த்தாங்கிக்கும் கரடிப்போக்குச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டுஎடுத்தவர்கள் மனிதநேய கண்ணிவெடி தலைமை அலுவலகத்தில் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (5549)


## சாவு அறிவித்தில்



### முனியாண்டி முருகேசு

அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த மாவீரர் 2ஆம் லெப். பகீரதி அவர்களின் தந்தையாராகிய முனியாண்டி முருகேசு அவர்கள் 11.01.2005 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவடைந்து விட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12.01.2005 ஆம் திகதி இன்று புதன் கிழமை மாலை 4 மணியளவில் கனகபுரம் இந்துமயானத்திற்கு கொண்டு செல்லப்படும். இத் தகவலை போராளிகள், உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:-
**இயக்குனர்,**
**அன்புச்சோலை மூதாளர் பேணலகம்,**
**கனகபுரம், கிளிநொச்சி.**

(சி-11185)

# ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதலில் 2 ராணுவ அதிகாரிகள், 4 பொலிசார் பலி

(பாக்தாத்)

**பாக்தாத்தில் ஒரு பிரிகேடியர் உள்ளிட்ட இரு இராணுவ அதிகாரிகளும் நான்கு பொலிசாரும் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய இருவேறு தாக்குதல் சம்பவங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.**

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் இராணுவத்துணைத் தலைமை அதிகாரி பிரிகேடியர் அமீர் அலிநயெப் அவரது மகன் லெப்டினனட் காலித் அமீர் ஜடன் காரில் அலுவலகத்துக்குப் புறப்பட்டார். அப்போது 2 கார்களில் வந்த தீவிரவாதிகள் இயந்திரத் துப்பாக்கி மூலம் அந்தக் காரை நோக்கிச் சுட்டனர். அதில் இராணுவ அதிகாரியும்,அவர் மகனும் குண்டு பாய்ந்து மரணமடைந்தனர். அதன் பிறகு தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். இன்னொரு சம்பவத்தில் பாக்தாத்தில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு தற்கொலைப் படையைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவர் வெடிகுண்டுகள் ஏற்றப்பட்ட காரை ஓட்டிக்கொண்டு வந்தனர். காரை அவர் வெடிக்கச் செய்தபோது 4 பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். 10 பேர் காயம் அடைந்தனர்.

## இராணுவ அதிகாரிகள் சிலர் இஸ்ரேலிய அரசால் பதவி நீக்கம்

இராணுவ அதிகாரிகள் சிலரை இஸ்ரேலிய அரசுபதவி நீக்கம் செய்துள்ளது. அத்தோடு இவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நட வடிக்கை எடுக்கவும் இஸ்ரேலிய அரசு தீர்மானித்துள்ளது.

பலஸ்தீனப் பகுதியான காஸாவில் உள்ள யூதக் குடியேற்றப் பகுதிகளில் இருந்து யூதர்களைத் திரும்பப் பெறப்போவதாக இஸ்ரேல் அரசு அறிவித்தது. இதற்கு குடியேற்றப் பகுதிகளில் வசிக்கும் யூதர்களும், பொதுமக்களில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனத்துடன் சமரச உடன்பாடு செய்து கொள்ள இருக்கும் இஸ்ரேல், அதற்கு முதற்படியாக இந்தத் திட்டத்தை முன்வைத்துள்ளது.

இந்த நிலையில் குடியேற்றப் பகுதியில் உள்ளயூதர்களை வெளியேற்றும்படி அரசு உத்தர விட்டால் அதற்கு கீழ்ப் படியமாட்டோம் என்று சில இராணுவ அதிகாரிகள் அரசுக்குக் கடிதம் எழுதி இருந்தனர். அவர்களையே இஸ்ரேல் அரசு பதவிநீக்கம் செய்துள்ளது.



நேற்று முன்தினமிரவு ஈராக் பாஸ்ராவில் ஏற்பட்ட இரு கார்க்குண்டு தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்ற இடங்களில் சேதமடைந்த வாகனங்களை முதலாவது படத்திலும், பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளதை இரண்டாவது படத்திலும், காயமடைந்தவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## போதைப் பொருள் வியாபாரி ஈராக்கில் சுட்டுக் கொலை

**- தீவிர வாதிகள் உரிமை கோரினர்**

(பாக்தாத்தில்)

ஈராக்கில் ஒரு போதைப்பொருள் வியாபாரியைத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். மொசூல் நகரத்தில் இந்தச் சம் பவம் நடந்தது.

அன்சர் அல்சன்னா என்ற தீவிரவாத இயக்கம் இந்தக் கொலையைச் செய்தது. இதை அந்த இயக்கமும் உறுதிப் படுத்தியுள்ளது. வியாபாரி கொலை செய் யப்பட்டதை படமாக எடுத்து அதை இணை யத் தளத்தில் இணைத்திருந்தது. ஈராக் இஸ்லாமிய நெறிமுறைப்படி ஆளப் பட வேண்டும் என்று அந்த இயக்கம் கூறியு ள்ளது.

## இந்தோனேசியா, ஈரானில் மீண்டும் நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் சுனாமி பாதித்த பகுதிகளில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும், உயிரிழப்புக்கள் ஏதும் இல்லை.

இந்தோனேசியாவில் கடந்த மாதம் 26 ஆம் திகதி சுமாத்திராத்தீவு அருகே உள்ள பாண்டா ஏஸ் பகுதியில் 9 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது. இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட இந்தப் பூகம்பம் கடல் கொந்தளிப்பாக மாறித் தெற்கா சியாவின் பெரும் பகுதியைப் பாதித்தது. இந்தச் சம்பவத்தில் ஒன்றரை இலட்சத் துக்கும் அதிகமானவர்கள் பலியாயினர். சுனாமியின் பாதிப்புக்கள் இன்னும் அடங்காத நிலையில், பாண்டாஏஸ் பகுதி யில் நேற்று முன்தினம் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் பயந்து தெருக்களுக்கு ஓடினர். 6.2 ரிக்டர் அளவுக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். உயிரிழப்புக்கள் ஏதும் நிகழவில்லை.

இதேவேளை ஈரான் நாட்டில் நேற்று முன்தினமிரவு 10.16 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 5.8 ஆகப் பதிவாகியது. கடந்த 2003 ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுமார் 30,000 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.

## ஹொண்டுராஸ் சனாதிபதியை கொல்வதற்கான திட்டம் முறியடிப்பு

(வோஷிங்டன்)

ஹொண்டுராஸ் நாட்டின் சனாதிபதியைக் கொலை செய்ய போதைவஸ்த்து கடத்தற் காரர் தீட்டிய திட்டம் முறியடிக்கப்பட் டுள்ளது.

அமெரிக்கா அருகே உள்ள ஹொண் டுராஸ் நாட்டின் சனாதிபதி ரிக்காட்டோ மடுரோ. இவர் தாதாக்கள் திட்டம் தீட்டி செயற்படுத்தும் குற்றங்களை ஒழிப்பதில் தீவிரம் காட்டி வருகிறார். இதனால் போதைப் பொருள் கடத்தற்காரர்கள் ஒரு கூலிக் கொலையாளி மூலம் அவரைக் கொல்லத் திட்டம் தீட்டினர். நிகரகுவா நாட்டைச் சேர்ந்த ஜோஸ் லியோனி டாட் என்பவனிடம் கொலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை ஒப்படைத் தனர்.

அவன் 2 சூட்கேஸ்களில் மரத்தினா லான கலைப்பொருட்களுக்கு அடியில் 20 கை எறிகுண்டுகளையும், கிரனேட் லோஞ்சர் ஒன்றையும், ஒரு துப்பாக்கியை யும் மறைத்து வைத்திருந்தான். அதை அவன் எடுத்துக்கொண்டு மடுரோவைக் கொல்லும் நோக்கத்தோடு ஹொண்டுராஸ் நாட்டுக்குள் நுழைந்தான்.

இந்தச் சதித்திட்டம் பற்றி அறிந்த பொலிசார் அவனைக் கைது செய்து கொலைத்திட்டத்தை முறியடித்தனர்.

### 300 பயணிகளும் விடுவிப்பு

நேபாளத்தில் தாம் கடத்திச் [illegible] 300 பயணிகளை, பொதுமக்களின் கடும் நெருக்குதலை அடுத்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் விடுவித்து விட்டனர். நேபாளத்தில் அரசை எதிர்த்துப் போராடி வரும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாலை போக்குவரத்துக் குத் தடை விதித்திருந்தனர். அதை மீறி, தெற்கு நேபாளத்தில் ராதஹட் மாவட் டத்தில் லமாஹிப் பகுதியில் 6 பேருந்து களில் 300 பேர் சென்றனர்

தாம் விதித்த தடையை மீறிப்பயணம் சென்றதால் ஆத்திரம் அடைந்த தீவிர வாதிகள் துப்பாக்கி முனையில் அந்தப் பயணிகளைக் கடத்திச் சென்றனர். அதற்கு மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின ரும், பத்திரிகை நிருபர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பொதுமக்களிட மிருந்தும் கடும்நெருக்குதல் வந்ததால் கடத்தப்பட்ட பயணிகள் அனைவரையும் 6 மணி நேரம் கழித்துத் தீவிரவாதிகள் விடுவித்து விட்டனர்.



அமெரிக்காவின் கல்போர்னியா மாநிலத்தில் மண்சரிவினால் காலிப், மாலிபுவில் பெருந்தெருவை தடைசெய்யும் வகையில் பாறாங்கல் ஒன்று விழுந்துள்ளதையும், அதனால் தொலை பேசிக்கம்பங்கள் சேதமடைந்திருப்பதையும் காணலாம்.

## கடும் பனிப்புயலால் அமெரிக்காவில் மண்சரிவு

(வோஷிங்டன்)


அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் வீசிய கடும் பனிப்புயல் காரணமாக மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த மண்சரிவினால் ஒருவர் பலியானதோடு 12 பேர் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காட்டாற்று வெள்ளம் போல் மண் மலைப்பகுதியிருந்து விழுந்ததைத் தாம் அவதானித்ததாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மண்சரிவினால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து 200 குடும்பங்கள் காப்பாற்றப்பட்டதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள் ளனர். பெருமளவு மக்கள் ஆபத்தான பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந் துள்ளனர்.

## மெக்சிக்கோ அரசு வெளியிட்டுள்ள சிறுவருக்கான புத்தகத்தால் பரபரப்பு

மெச்சிக்கோ அரசு அச்சிட்டு வெளியிட்டுள்ள சிறுவருக்கான படங்களுடன் கூடிய கதைப் புத்தகங்கள் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது அதில் சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் நுழைவதற்கான வழிமுறைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்அமெரிக்க நாடான மெச்சிக்கோவிலிருந்து ஆண்டு தோறும் இலட்சக் கணக்கானவர்கள் வேலை தேடி அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக நுழைகின்றார்கள். இது அமெரிக்காவிற்கு பெரும்தலையிடியாக உள்ளது இந் நிலையில் 15 இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ள அந்தப் படங்களுடன் கூடிய கதையில் இரகசியமான முறையில் அமெரிக்காவிற்குள் நுழையும் வழிமுறைகள் பற்றியும், பாலைவனத்தையும் ஆற்றைக் கடக்கும் வழி முறைகள் மேலும் அதிகாரிகளிடம் சிக்கிக் கொள்ளும் அகதிகளின் முறையீடுபற்றியும் அதில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இச் செயலுக்கு அமெரிக்கா கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.





சுனாமி அனர்த்தத்தினால் அழிவுற்ற முல்லை நகரின் இடிபாடுகளை கனரக வாகனங்களின் உதவியுடன் அகற்றும் பணி நடைபெறுவதையும் இடிபாடுகள் அகற்றப்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதியையும் சுகாதார தொண்டர்கள் அப்பகுதி கிணறுகளை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சசி,லோகீசன்)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிவதில் த.புனர்வாழ்வுக் கழகம் பொறுப்புணர்வோடு செயற்படுகிறது

## மட்டு. திருமலை ஆயர் ஜோசெப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை



**கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல நிறுவனங்கள் உதவ முன்வந்தாலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பொறுப்புணர்வோடும் அர்ப்பணிப்போடும் செயற்பட்டு வருகின்றது என மட்டக்களப்பு திருமலை மறைமாவட்டங்களின் ஆயர் அதிவணக்கத்திற்குரிய ஜோசெப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.**

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட அனர்த்தத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்களை இழந்திருக்கிறார்கள். இன்று இந்த மக்களுடைய அவலங்களை எவ்வளவுதான் பணம் இருந்தாலும் சரி நல்லெண்ணம் இருந்தாலும் சரி யாராலும் ஈடுசெய்யமுடியாது. இழப்புக்கள் இழப்புக்களாகவே மாறியிருக்கின்றன.

மிகுந்த துயரத்தில் இருக்கின்ற மக்களுக்கு இறைவன் தான் ஆறுதலளிக்க வேண்டும். இருந்தாலும் மனிதநேய அடிப்படையில் அம்மக்களுக்கு புனர்வாழ்வளிக்க பலர் முன்வந்திருக்கிறார்கள்.

இங்கு நலன்புரி நிலையங்களிலும் வேறு இடங்களிலும் உள்ள மக்களுக்கு மூன்று நேரமும் சமைத்த உணவுகள் வழங்க வேண்டியிருக்கின்றது. ஏனெனில் அவர்கள் அனைத்தையுமே இழந்தே வந்துள்ளனர். எனவே அவர்களுக்கு உணவு கொடுக்கப்பட வேண்டிய கடப்பாடு உண்டு.

அந்தவகையிலே பல நிறுவனங்கள் சமய ரீதியாக, சமூக ரீதியாக தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் தாமாக முன்வந்து களத்திலே இறங்கி எங்களுடைய அல்லற்படுகின்ற மக்களுக்கு உடனடியாக உதவ முன்வந்தார்கள்.

அதிலே முக்கியமாக TRO எனப்படும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இந்தப் பணியிலே முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை நாங்களும் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

தொண்டு நிறுவனங்கள் தமது நிதிவசதிக்கேற்ப உதவிகளை செய்து வந்தாலும் நாங்களும் எங்களுடைய திருச்சபையும் EHED என்ற நிறுவனத்தோடும் ஏனைய மக்கள் தரும் உதவிகளுடனும் சில மக்களுக்கு நாங்கள் எம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றோம்.

பல நிறுவனங்கள் உதவ முன்வந்தாலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்புணர்வோடும் அர்ப்பணிப்போடும் செயற்பட்டு வருவதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

குறிப்பாக இந்த திடீர் அனர்த்தப் பேரலையின் பின்னர் நாங்கள் காணக்கூடியதாக இருப்பது என்னவென்றால் பல இடங்களில் இருந்தும் உதவும் மனப்பாங்கு வளர்ந்திருக்கின்றது. பலரும் வேறுபாடுகளை மறந்து உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் மக்களும் தங்களுடைய அனுதாபத்தை தெரிவித்திருக்கின்றார்கள். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாக ஓர்அனுதாப அலை ஏற்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என்று கூறினார். (சோ)



சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த முல்லைத்தீவு மக்களுக்கு வவுனியாப் பகுதியைச்சேர்ந்த குடும்பம் ஒன்று நிவாரணப் பொருட்களை செயலணிக்குழுவினரிடம் வழங்குவதை படத்தில் காணலாம். (படம் சசி)

## முல்லை. ம. வி. ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மீண்டும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கற்பித்தல் செயற்பாட்டைத் தவிர ஏனைய செயற்பாடுகள் நேற்று முன்தினம் முதல் இடம் பெறுகின்றதென முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (08)

## 179 பயிலுனர் பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 179 பயிலுனர் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப் பெற்றுள்ளது. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் வைத்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நேற்று முன்தினம் மேற்படி பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கினார். ஆசிரிய நியமனம் பெற்றுள்ள 179பட்டதாரிகளில் 162 பட்டதாரிகள் தங்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கனேடிய தேசிய வானொலி செய்தியாளர் குழு த.பு.கழக தலைமைப் பணிமனைக்கு விஜயம்

(அலுவலக செய்தியாளர்)

கனேடிய தேசிய வானொலியின் செய்தியாளர்கள் கடந்த 8ஆம் திகதியன்று தமிழர் புனர்வாழ்வுக்கழக தலைமைச் செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர் லோரன்ஸ் கிறிஸ்டியைச் சந்தித்து சுனாமி அனர்த்த பாதிப்புக்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர். மேற்படி கலந்துரையாடலின் போது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டதுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொள்ளவுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை குறித்தும், தற்போது புனர்வாழ்வு கழகத்தினால் மேற்கொள்ளப் பெற்றுவரும் புனர்வாழ்வு நடவடிக்கை குறித்த விபரங்களை திட்டப்பணிப்பாளர் விபரமாக எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சோ)

# மேஜர் முரளி முன்பள்ளி கிளி.நகரில் திறந்துவைப்பு




(அலுவலக செய்தியாளர்)

மேஜர் முரளி முன்பள்ளி நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பரவிப்பாஞ்சானில் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப் பெற்றுள்ளது.

முருகுபாரிமகன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கலவிளக்கினை முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சரவணபவான், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், முன்பள்ளி ஆசிரியை திருமதி பரஞ்சோதி ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்து மேஜர்முரளி முன்பள்ளிக்கு வருகைதந்திருந்த சிறார்களுக்கு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்கள் மற்றும் கல்வி சார் ஊழியர்கள் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வீட்டுத் தோட்டத்திற்கு உதவி

(உருத்திரபுரம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட விதைபொதிகள் உருத்திரபுரம் விவசாய போதனாசிரியர் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் 30 விவசாயிகளுக்கு வழங்கி ஊக்கிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராசாவும், அப்பகுதி விவசாய போதனாசிரியர் க.கணேசலிங்கம் அவர்களும் கலந்துகொண்டு விதைப்பொதிகளை வழங்கியதுடன் விவசாயப் பயிற்சியையும் வழங்கினர். இந்நிகழ்விற்கு அப்பகுதி கிராம முன்னேற்றச் சங்க தலைவரும் ஒத்துழைப்பு வழங்கினார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதியில்

# யாழ். மாவட்ட அரசியல்துறையினர் மீட்புப்பணி

(நல்லூர்)

**வடமராட்சிப் பகுதியில் சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதிகளில் மீட்புப்பணி நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் துரித செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.**

இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வடமராட்சிகிழக்கு, பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே இச்செயற்பாட்டினை அரசியல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

மீட்புப் பணியினைத் துரிதப் படுத்துவதற்கு வசதியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை மேலும் பல பிரிவுகளாகப் பிரித்து யாழ். மாவட்டத்திலுள்ள அரசியல்துறையின் பிரதேசப்பொறுப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் தலைமையின் கீழ் விடப்பட்டுள்ளதுடன் இப்பணிகளை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நேரில் நின்று கவனித்தும் வருகின்றார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், யாழ்.மாவட்ட மாணவர்அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோர் தலைமையில் வடமராட்சி முனைகற்கோவளம் பகுதியும், அரசியல்துறையைச் சேர்ந்த இன்பன் தலைமையில் பருத்தித்துறை கொட்டடிப்பகுதியும் , யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தேவா தலைமையில் எரிஞ்சம் மன்கோவிலடிப் பகுதியும், வடமராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா தலைமையில் மணற்காடு பொற்பதிப் பகுதியும், யாழ்ப்பாணம் நல்லூர்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியும் மற்றும் தீவகப்பொறுப்பாளர் கண்ணன்தலைமையிலும் இம் மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் பெண்கள் சிறுவர்களின் நலன்களும், சுகாதார வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (41)




ஐ.நா. பொதுச் செயலரை சுனாமியால் பாதிக்கப்பட்ட வடபகுதிக்கு விஜயம் செய்யுமாறு கோரி யாழ்ப்பாணத்திலுள்ள யு.என்.எச்.சி.ஆர். அலுவலகம் முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பொது அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட கவன ஈர்ப்பு போராட்டத்தின்போது வைக்கப்பட்டிருந்த சுலோகங்கள்

(படம் : செல்வா)

# பனை, தென்னை தறிப்பதை படையினர் உடன் நிறுத்த வேண்டும்

(தென்மராட்சி)

எழுது மட்டுவாள் பிரதேசத்தில் பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ள சிறிலங்காப் படைகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அங்குள்ள பனை, தென்னை மரங்களை வகை தொகையின்றி தறித்து வருவதை உடனடியாக நிறுத்த வேண்டுமெனக் கோரியுள்ளது. சுனாமி அலைக்குப் பின்னால் யாழ். குடாநாட்டில் அழிந்து போயுள்ள படை நிலைகளைப் பலப்படுத்தும் நோக்குடனும் மீண்டும் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை தமிழ் மக்கள் மீது மேற்கொள்ள வேண்டும் என்ற வெறியுடனும் படை முகாம்களை பலப்படுத்தி வருவதுடன் எமது மக்களின் வளங்களை ஒட்டு மொத்தமாக நாசம் செய்து வரும் இத்தகைய காட்டு மிராண்டித்தனமான செயற்பாடுகளைக் கண்டிப்பதுடன் எமது பிரதேசத்தின் முன்னர் அழிக்கப்பட்ட வளங்களில் அருகி நிற்கும் மிக சொற்பமான பனை, தென்னை மரங்களையும் ஒட்டு மொத்தமாக அழித்து வருவதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் எமது சுற்றுச் சூழலுக்கும் இயற்கைக்கு விரோதமாயும் எமது மண்ணை ஆக்கிரமிப்புப் படைகள் அழிக்க நினைப்பதை இந்த மண்ணை நேசிக்கும் எவரும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்றும் இத்தகைய நடவடிக்கைகளை படையினர் நிறுத்தாவிட்டால் பொது மக்கள் தங்களது எதிர்ப்பை சனநாயக ரீதியில் வழங்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிய வருகிறது.

(28)

# இடம் பெயர்ந்தோருக்கு பால்மா வழங்கல்



(நமது நிருபர்)

நெஸ்ரோமோல்ட் நிறுவனத்தினர் வடமராட்சியில் பதினாறு இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கு பால்மா வகைகளை வழங்கியுள்ளனர். கடலனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பத்து நாட்களாக இவ்வுதவி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமைத்த நூடில்ஸ், லக்ரோஜன், நெஸ்பிறே பால்மா என்பவற்றை வழங்கியுள்ளனர். மொத்தமாக 4240 பல்வேறுபட்ட பால்மா வகைகள் வழங்கப்பட்டுள்ளன. நெஸ்பிறே பால்மா பைக்கட் 900, லக்ரோஜன் I 360, லக்ரோஜன் II 360, நூடில்ஸ் 1800, நெஸ்பிறே பால்மா பைக்கட் 820 என்பன வழங்கப்பட்டன. இதற்கு முன்னர் முல்லைத்தீவு, கிளிநொச்சியிலும் இடம் பெயர்ந்த மக்களுக்கு பால்மா வகைகள் வழங்கப்பட்டன. (45)

# யு.என்.எச்.சி.ஆர் உதவி

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மீனவர் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் அல்லாத நிவாரணப் பொருட்களை வழங்கியது.

குறிப்பாக வியாபாரி மூலை, இன்பருட்டி பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு குடம், கூடாரம், வாளி, பாய், அலவாங்கு, பிளாஸ்ரிக்பேசின் போன்ற பல்வேறு பொருட்களை இன்பருட்டி சிக்கனக் கடனுதவு சங்கத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை வழங்கியது. (45)

# தென்மராட்சியில் சட்ட விரோத மண் அகழ்வை உடன் நிறுத்த

# சூழல் பாதுகாப்பு அமைப்புக் கூட்டத்தில் தீர்மானம்!

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் நடைபெற்று வரும் சட்ட விரோத மண் அகழ்வை முற்றாய் தடை செய்வது சம்பந்தமாய் சூழல் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அனைத்து உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் வாகனங்களில் மணல் ஏற்றும், தொழில் செய்வோர் மற்றும் கிராம ரீதியான சூழல் பாதுகாப்பு அமைப்பினர் கலந்து கொண்ட விசேட கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது..

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் தென்மராட்சி கோட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கருத்துரை வழங்கிய ஈஸ்வரன் அவர்கள் இன்று சட்ட விரோத மண் அகழ்வு ஒரு தொழிலாகவே சிலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இது சம்பந்தமாய் இத் தொழிலில் ஈடுபட்டவர்களின் நோக்கம் ஆதாயம் மட்டுமே. இதனால் அவர்கள் எமது சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தோ, பௌதீக வளங்களின் சிதைவுகள் குறித்தோ அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தோ சிந்தனை அற்றவர்களாய் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார்கள். எமது வருங்காலத் தலைமுறைகளின் வாழ்வுக்கும் சூழலுக்கும் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்த வேண்டும். இது குறித்து மாபெரும் சூழல் பாதுகாப்பு மாநாடு ஒன்று வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சாவகச்சேரி றிபோக் கல்லூரியில் நடைபெற இருப்பதாகவும் அனைத்து தரப்பினரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் படி அழைப்பு விடுத்துள்ளார். (28)


# வரணியில் கெட்டவார்த்தைகளை சுவரில் எழுதும் விசமிகள்

(தென்மராட்சி)

வரணி அம்மா கடை பேருந்து தரிப்பிடக்கின் சுவர்களில் சில விசமிகள் தொடர்ந்து இரவு வேளைகளில் கெட்ட வார்த்தைகளை எழுதி வருவதாக தெரியவருகிறது.

ஊரில் உள்ள இளம் பெண்களையும், இளைஞர்களின் பெயர்களுடன் இணைத்து எழுதி வருவதால் தேவையற்ற சர்ச்சைகள் தோன்றுவதாகவும் இதனால் சம்பந்தப்பட்டவர்கள் பலர் பாதிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இவற்றை அழிப்பதற்குசிலர் கழிவு எண்ணெய்களை சுவரின் மீது ஊற்றி விடுவதால் பேருந்து தரிப்பிடம் அசிங்கமாய் காட்சி தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இரவு வேளை களிலேயே இவை எழுதப்படுவ தாகவும் இந்த பேருந்துதரிப்பிடத் துக்கு முன்னால் சிறிலங்காப் படைகளின் பாரிய படைத்தளம் இருப்பதும் தெரிய வருகிறது. (28)



சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை கண்டறிந்து துயர் துடைக்கும் பணிக்கு யாழ். மாவட்ட வாணிபரின் பங்களிப்பினை ஒரு முகப்படுத்திப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட யாழ். மாவட்ட வணிகர் ஒன்றியத்தின் முதலாவது செயற் குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். வணிகர் கழக மண்டபத்தில் நடைபெறுவதையும், 1,01,000 ரூபா பெறுமதியான காசோலையினை யாழ். மாவட்ட வணிகர் ஒன்றியத் தலைவர் சொ. வெற்றியரசனிடம் யாழ். வணிகர் கழக நிர்வாகத்தினர் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படம் : செல்வா)

# எதனுடனும் ஒப்பிட முடியாத பேரழிவு இது!

**பி.பி.சி. உலக சேவையின் இலங்கைக்கான முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசனுடனான நேர்காணல்**

முல்லைத்தீவில் சுனாமியால் ஏற்பட்டிருக்கின்ற அழிவை எதற்கும் ஒப்பிட்டுக் கூற முடியாது. யுத்த அழிவுகள் வேறு. இயற்கை அழிவுகள் என்பது வேறு இங்கு இயற்கை அழிவு இப்படியொரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என யாரும் நினைக்கவில்லை என பி.பி.ஸி செய்தியாளர் திருமதி.பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட சுனாமி பேரழிவு தொடர்பான செய்திகளை அவர் பி.பி.ஸிக்காக திரட்டிக் கொண்டிருக்கையில் நாம் அவரைச் சந்தித்தோம்.



சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவில் பிரான்சிஸ் ஹரிசன்

கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் வரை இலங்கைக்கான பி.பி.ஸி முகவராக இருந்த இவர், தற்போது ஈரானில் கடமை புரிகிறார். 4 வருடங்கள் இங்கு கடமை புரிந்த இவர் சுனாமி அனர்த்தங்கள் தொடர்பில்செய்திகளைத்திரட்டுவதற்காக இலங்கை வந்துள்ளார்.

அரசின் நடவடிக்கைகள் தொடர்பான கேள்விகள் எதற்கும் பதிலளித்தால் அது பி.பிஸியின் கருத்தாக மாறிவிடும். எனவே அது தொடர்பான கேள்விகளைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்ட அவர் முல்லைத்தீவு நிலைமை தொடர்பாக எமக்கு வழங்கிய செவ்வியை கீழே தருகின்றோம்.

** சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத் தீவின் நிலைமை பற்றி உங்கள் பார்வை எப்படி உள்ளது?*

முல்லைத்தீவைப் பார்க்கின்ற போது மிகவும் கவலையாக இருக்கின்றது. இந்தப் பகுதிகள் யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகளை விட மிகவும் மோசமான அதிகமான அழிவுகளைச் சந்தித்துள்ளது. ஒரு யுத்தம் ஏற்படுத்த முடியாத அழிவுகளை இயற்கை ஏற்படுத்தி இருக்கின்றது. யுத்த நிறுத்தம் ஏற்பட்டதன் பின்னர் நான் இந்தப் பகுதிகளுக்கு வந்திருந்தேன் அப்போது தான்



மக்கள் மீளக் குடியமர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையுடன் தான் இருந்தார்கள். ஆனால் அவர்களின் உழைப்பு, உறுதி, மகிழ்ச்சி அனைத்துடன் அவர்களின் இருப்பிடங்கள் பொருட்கள் அனைத்துமே கடல் அள்ளிச் சென்று அவர்களை நிர்க்கதியாக்கி பெரும் துயரில் ஆழ்த்தி விட்டது.

**. கடற் பெருக்கில் சிக்கித் தப்பி நலன் புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக் களை நீங்கள் சென்று பார்வையிட்டிருந் தீர்களா? அப்படியானால் அவர்களின் மன நிலை பற்றி உங்கள் பார்வை எப்படி இருக் கின்றது?*

ஆம் இந்தப் பெரும் அனர்த்தத்தில் இருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டவர்கள் பெருந்தொகையானவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்றார்கள். உண்மையில் இந்த மக்களின் மனநிலை மிக மோசமாக இருக்கின்றது. அவர்கள் கூறுகின்ற கதைகள் வேதனையைத்தருகின்றது. தங்களை நோக்கி கடல் வந்ததும் அதில் அடிபட்டுப் போனதும் அவர்கள் மனதில் அழியாதிருக்கின்றது. குறிப்பாக சிறுவர்கள் பற்றித்தான் நான் மிகக் கவலையடைகின் றேன். பிள்ளைகள் பெரிதும்மனநிலை பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஏனெனில் சிறுவர்கள் தங்கள் தாய் தந்தையர், இரத்த உறவுகள் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டு வதையும் அதில் மூழ்கி இறந்து போவ தையும் நேரிலே பார்த்திருக்கின்றார்கள் இது அவர்களின் மனநிலையை வெகுவாகப்பாதித்திருக்கின்றது எனக்கும் வேதனையைத்தரு கின்றது.

நான் ஒரு கதையைச் சொல்கின்றேன். ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் அவன், எனது மகன் மாதிரி; அவனை இந்தச் சம்பவம் பற்றி கேட்டவுடனேயே அவன் ஏதேதோ எல்லாம் சொல்லிக் கொண்டே போகிறான் தான் கடலில் அடித்துச் செல்லப் பட்டது, அதிலிருந்து தப்ப முடியாமல் தத்தளித்தது, இறந்த சடலத்தைப் பார்த்தது. அப்படி இப்படி என்று கதையை நிறுத்தாமலேயே தொடர்ந்துகொண்டு போனான். இது சிறு பிள்ளைகளின் மனப் பாதிப்பை எடுத்துக் காட்டுகிறது. இந்த நிலையில் தான்அவர்கள் இருக்கிறனர். இவர்களின் மனநிலை மிக மோசமாக இருக்கின்றது. குறிப்பாக சிறு பிள்ளைகளின் மனநிலை கவலை தருவதாக இருக்கின்றது.

ஒரு தாய் தனது பிள்ளையைக் காப்பாற்றக் கடுமையாகப் போராடியதாகவும் கடல் நீர், தனது இறுகிய அரவணைப்பில் இருந்த குழந்தையை உருட்டி அடித்துப் பறித்துக் கொண்டு போய் விட்டதாகவும். வேதனையுடன் கூறினார். இப்படி பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அனைவரும் இப்படித்தான் புலம்புகிறார்கள். எவராலும் எவரையும் காப்பாற்ற முடியாத நிலை. அந்த அளவிற்கு கடல் மூர்க்கமாக அடித்திருக்கின்றது. இவர்களின் வேதனைகளை என்னால் உணர முடிகின்றது. நானும் ஒரு தாய்தான் அதனால் என்னை இந்த சோகக் கதைகள்வெகுவர்கப்பாதிக்கச்செய்கின்றது

இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் நீண்டகாலமாக யுத்தப்பாதிப்புக்குள்ளாகி பல தடவைகள் இடம் பெயர்ந்து பெரும் சிரமங்களின் மத்தியில் தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர்ந்து மகிழ்வாக இருந்தார்கள். அவர்களின் அந்த மகிழ்வை முன்னர் இந்தப்பகுதிக்கு வந்தபோது கண்டேன். நான் கண்ட அந்த மக்கள் "சுனாமி" யால் பாதிக்கப்பட்டு நிறையப்பேர் இறந்திருக்கலாம். முன்னர் அவர்கள் வாழ்ந்த மகிழ்வான வாழ்வையும் பார்த்த அதேவேளை, இன்று அவர்களின் துயரத்தையும் பார்க்கிறேன் இது ரொம்பவும் மோசமானது.

இதுபோலத்தான் வேறு பகுதிகளில் உள்ளவர்களும், அவர்கள் ஆடம்பரமான மகிழ்வான வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்தவர்கள். பெரும் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்து சொத்துக்களை இழந்திருக்கிறார்கள்.



ஆனால் இந்த முல்லைத்தீவு மக்களின் நிலை மிகவும் மோசமானது. தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து துயரத்துக்குள்ளேயே வாழ்ந்து மகிழ்வான வாழ்வுக்குள் போய்க் கொண்டிருந்த போது இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலமாக துன்பப்பட்டு எங்கே இருந்தார்களோ அதேமாதிரி முகாம்களுக்கே மீண்டும் திரும்பிவரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது மனதை வருத்துகின்ற ஒரு விடயம்.

*முல்லைத்தீவின் அழிவை எதற்காவது ஒப்பிட்டுக்கூறக் கூடியதாக இருக்கிறதா?*

இந்த அழிவை எதற்கும் ஒப்பிட்டுக்கூற முடியாது. பேரழிவு தான் இது. யுத்த அழிவுகள் வேறு. இயற்கை அழிவுகள் வேறு. இங்கு இயற்கை அழிவு இப்படித் தாக்கம் ஏற்படுத்தும் என்று யாரும் நினைக்கவில்லை.

** முகாம்களில் வாழ்கின்ற மக்கள் இந்த அதிர்வில் இருந்து மீளக்கூடியதாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?*

இது மிகவும் கஷ்ரமான கேள்வி. இந்த மக்களால் எவ்வளவு காலம் துயரத் தைத் தாங்க முடியும்? சிலரிடம் துணிவு இருக்கிறது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு மீண்டும் புதிய வாழ்வை ஆரம்பிப்பார்கள். ஆனால் இந்த மக்கள் அழிவுகளுக்குள்ளேயே வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள் இனி என்ன செய்யப் போகின்றார்கள் என்று தெரியவில்லை. இந்த அழிவில் இருந்து மீள்வதென்பது கஷ்ரமான ஒன்று. அவர்கள் எப்படிச் செய்வார்கள் என்று என்னால் கூற முடியவில்லை. இதற்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம். 62 வயதுடைய ஒரு அம்மா அவர் வத்திராயனைச் சேர்ந்தவர். அவரின் மனநிலை மோசமாக இருக்கிறது. அவர் சொன்னார் 64 ஆம் ஆண்டு கடலில் புயல் அடித்த நேரம் கணவன் கடலில் செத்து விட்டார். பிறகு யுத்தத்தால் இடம் பெயர்நது அனைத்தையும் இழந்து மீண்டும் அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்து வாழ்வைக்கட்டி எழுப்பிக்கொண்டிருந்த இந்த வேளையில் கடல் கொந்தளிப்பில் தனது பிள்ளைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் இருக்கின்றார். அவர் புலம்புகிறார். "வாழவேண்டிய இளம்பிள்ளைகள் எல்லாம் செத்துப்போய் விட்டார்கள். நான் ஏன் தப்பியிருக்கிறேன் எங்களுக்கு ஏன் இந்தத் துன்பம் தொடர்ந்து வருகுது" என்ற கேள்வியை எங்களிடம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். இந்த மக்கள் இப்படியான கேள்வியுடன் தான் இருக்கின்றார்கள். அவர்களுக்கு மீண்டும் துன்பத்தையே கொடுத்து மனதைச் சோர்வாக்கி அவர்களை மன நெருக்கடிக்குள்ளாக்குகின்ற அந்த முகாம் வாழ்க்கைக்குத் திரும்பிப்போவது என்பது மிகவும் மோசமானது. இவர்கள் எப்படி மீளப்போகிறார்கள் என்பது என்னால் கூறமுடியாதிருக்கின்றது.

இதிலே பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றிக் கூறுவதானால், அன்ரனிடேவிட் என்ற 13 வயதுப் பிள்ளை ஒருவனுடன் கதைத்தேன். அந்தப்பிள்ளை சொன்னான் "நான் 5வயதாக இருக்கின்ற போது யுத்தத்தில் தந்தையைப்பறி கொடுத்து விட்டேன்" அவன் இந்தப் பேரழிவு பற்றிக் கூறும் போது சொன்னான் "நீண்ட யுத்தம் நடந்தது அதுக்குள் அப்பாவை இழந்தோம்.

**அ.லோகீசன்**

இப்படிப் பலதை இழந்தோம். ஆனால் ஆமியால எல்லாத்தையும் கொல்ல முடியேல்ல ஆனால் கடல்வந்து அவங்களால செய்ய ஏலாத எல்லாத்தையும் செய்து போட்டுது" என்று அந்தச்சிறுவன் கடல்செய்த பெரிய அனர்த்தத்தை வெகு சுருக்கமாகச் சொன்னான். அந்த மாதிரியான மோசமான மனநிலையில் தான் இருக்கின்றார்கள். இந்த உதாரணமே அவர்களின் மன நிலையைப் புரிந்து கொள்ளப் போதுமானது.

**.பாதிக்கப்பட்ட மக்களுக்காக உங்களால் செய்ய முடிந்தது?*

எங்களைப் பொறுத்தவரை இந்த அழிவுகள் பெரும் துன்பமானது. இங்குள்ள நிலைபற்றி நான் ஊடகவியாலாளர் என்ற வகையில் வெளி உலகுக்குக் கூற முடியும் இதைவிட எதனைச் செய்ய முடியும்? இவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்ளுகிறோம். உலக உதவிகள் தான் இந்த மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பும்




## 03.01.2005-09-01-2005

### 03.

*. யுனிசெப் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி கரோல் பெலமிக் அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை சந்தித்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது குறித்து ஆராய்ந்தனர்.


யுனிசெப்புடன் ஆராய்வு

*. யுனிசெப் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி கரோல் பெலமின் முல்லைத்தீவுக்குச் சென்று பாதிக்கப்பட்ட பல பிரதேங்களை பார்வையிட்டார்.

*. சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 1500 உதவித் துருப்புக்களை அனுப்பும் திட்டத்தின் முதற்கட்டமாக 42அமெரிக்கப் படையினர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். அத்துடன் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு பிரிட்டிஷ் போர்க் கப்பலும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

*. மட்டக்களப்பிற்கு இந்தியத் தூதுவர் நிருபமாராவ் விஜயம் செய்தார்.

*. விடுதலைப்புலிகளுக்கும் -அதிரடிப் படையினருக்கும் இடையிலான சந்திப்பு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

*. வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவில் சுனாமி அனர்த்தத்தால் முல்லைத்தீவில் மரணமானோரின் மூன்று உடல்கள் மீட்கப்பட்டன.

### 04.

* இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்கர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்தார். இதன் போது சர்வதேச உதவிகளை மக்களுக்குச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கக் கூடிய கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும். அதுவே எமது தலைமைப்பீடத்தின் எண்ணம் என வலியுறுத்தப்பட்டது.


நோர்வேத் தூதுவருடன்

*. இத்தாலிய நாட்டின் மனிதாபிமான உதவிப் பொருட்களான மருந்துகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச் செல்வனிடம் கையளிக்கப்பட்டது. இதற்கு முன்னதாக இத்தாலியத் தூதரகத்தின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீபன் ஸன்னனீ, அதன் முதலாவது செயலாளர் இத்தாலிய அரசின் பொது நிர்வாக மருத்துவ அதிகாரி டாக்டர் அலிஸானன்ரோ ரொபினோ ஆகியோர் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் இப் பொருட்கள் நேரடியாக ஒப்படைக்கப்பட்டன.


மனிதாபிமான உதவி

*. வடகிழக்கு மக்களுக்கு கனேடிய உதவி சென்றடைவதை உறுதிப்படுத்துவேன் என கனேடியப் பிரதமர் போல் மாட்டின் தெரிவிப்பு.

*. இயற்கை அனர்த்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை கட்டியெழுப்ப சர்வதேசம்தான் உதவவேண்டுமென தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவிப்பு.

*. பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி வடமராட்சிக்கு விஜயம்.

*. அமெரிக்க துருப்புக்கள் 70 பேர் கொழும்பு வருகை

### 05.

* இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் கலாநிதி மறியோசெனரி அரசியல் துறைப் பொறுப்பாளரை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்தார்.


வத்திக்கான் தூதுவருடன்..

* இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்த மாதிரிக் கிராமங்களை அமைக்க இடங்கள் தெரிவு முல்லைத்தீவில் அமைந்துள்ள கடற்புலிகளின் தற்காலிக மீட்புப் பணி முகாமில் நடைபெற்ற கலந்துரையாடலில் இடம் பெற்றது.


மீள் குடியமர்த்த ஆராய்வு

* சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகள் சேதங்களை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவருடன் வந்த குழுவினரும் பார்வையிட்டனர்.


ரணில் பார்வை

* தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் இந்தியா நேரடியாக எவ்விதமான உதவிகளையும் செய்யாதென இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

* நலன்புரி முகாம்களைப் பொறுப்பேற்கும் அரசின் முடிவால் திருமலையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

### 06.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு புலிகள் பல வகையிலும் உதவியமை பாராட்டத்தக்கதென வட- கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவிப்பு.

* சிறிலங்கா அரச படைகள் போர் முனைப்பில் இருந்து நீங்கி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான முறையில் செயற்பட வேண்டுமென யாழ்ப்பாண கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளை பளை புதுக்காட்டுச் சந்தியில் சந்தித்த தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவிப்பு.

* அமெரிக்கசெனட் சபை உறுப்பினர்கள் இருவர் இலங்கைக்கு விஜயம்.

* திருமலை அகதி முகாம்கள் நிர்வகிப்பில் புலிகள்-படையினர் இணக்கம்.

### 07.

* ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் கொழும்பிற்கு விஜயம்.


கொபி அனான் வருகை

* முல்லைத்தீவு பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படைத் திட்டங்களை மேற்கொள்ளும் கலந்துரையாடல் தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தலைமையில் முல்லைத்தீவில் இடம்பெற்றது.


கலந்துரையாடல்

* அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் ஒரு நாள் விஜயமாக இலங்கைக்கு வந்து திரும்பினார்.

*.கடல்அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்து நிற்கின்ற மக்களுக்கு நேரடியாக உதவ சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கம் எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது இருக்கவேண்டும் என்பதே எங்களுடைய வேண்டுகோள் என பி.பி.ஸிக்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு.

*. புலிகளின் நிர்வாகத்திறன் குறித்து சிக்காகோரிபியூன் பத்திரிகை பாராட்டி கட்டுரை வெளியிட்டது.

### 08.

*.சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் நான் விஜயம் செய்ய ஆவலாக உள்ள போதும் இலங்கை அரசே தனது விஜயத் திற்கான நிகழ்ச்சி நிரலைத்தயாரித்ததென ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் அம்பாந்தோட்டையில் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு இதேவேளை காலி திருமலைக்கும் விஜயம் செய்தார்.

*. மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரியில் மரணவீடொன்றில் கைக் குண்டு வீச்சில் மூன்று பேர் பலி 37 பேர் காயம்.

*.சனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் வாசுதேவநாணயக்கார யாழ்.விஜயம்.

*.கொபி அனான் வன்னிக்கு வருகைத்தரக்கோரி கிளி,வடமராட்சி கிழக்கு அமைப்புக்களும் இணைந்து கிளிநொச்சியிலுள்ள வன்னிக்கான "யூனிசெப்" பிரதிநிதி பெனிபுறூவ் அவர்களிடம் மகஜர் கையளித்தனர்.

*.அரசாங்க ஊடகங்களில் விடுதலைப் புலிகளின் தலைமை தொடர்பாக விசமத்தனமான பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவிப்பு.

### 09.

*. ஐ.நா பொதுச் செயலாளர் வன்னிக்கு வர ஆர்வம் கொண்டிருந்த போது சிறிலங்கா அரசாங்கம் அதற்கு அனுமதி மறுத்திருந்தது. இதுவே அனான் வன்னிக்கு வருகை தருவதையை முழு அளவில் தடுத்திருக்கிறதென தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பி.பி.ஸிக்கு தெரிவிப்பு.

*.சிறிலங்கா சனாதிபதியையும் கொபி அனான் சந்தித்தார்.

*.தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜியை ஐ.நா. பொதுச் செயலாளர் அனான் கொழும்பில் சந்தித்தார்.


ஐ.பு.க பணிப்பாளருடன்....

*.தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை கொபி அனான் சந்தித்து சுனாமி அனர்த்தத்தின் பின் விடுதலைப்புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் ஆற்றும் சேவைகளைப் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.


த.தே. கூட்டமைப்புடன்

*.புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லாதவாறு அரசு வகுத்த பிரயாணத்திட்டம் குறித்து நான் விரக்தி அடைந்துள்ளேன் என கொபி அனான் கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

*. சுனாமியால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதி மக்களின் 50 குடும்பங்களுக்கான வீட்மைப்புத்திட்டத்தை முழுமையாகப் பொறுப்பேற்கவும் வேறு சில பணிகளை பொறுப்பேற்கவும் இலங்கை கிரிக்கெட் சபை முன்வந்துள்ளது. தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனை அரசியல்துறை நடுவப்பணியகத்தில் சந்தித்தவேளை தெரிவிக்கப்பட்டது.


கிரிக்கெட் சபையினருடன்

*.அமெரிக்க நிவாரண அமைப்பைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குழுவினர் கிளிநொச்சி விஜயம்.


கிளிநொச்சி விஜயம்

*.சனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச்செயலாளர் வாசுதேவ நாணயக்கார முல்லைத்தீவுக்கு விஜயம்.


முல்லை விஜயம்

*.ஐ.நா.சபை பொதுச் செயலாளர் கொபி அனான் சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளையும் பார்வையிட வேண்டுமென வலியுறுத்தி யு.என்.எச்.சி.ஆர். யாழ் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

* .முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்தோரின் 4 உடல்கள் கண்டுபிடிப்பு.

### —12 மாதங்களில் நாட்டின் பொருளாதாரத்தை—

# மேம்படுத்துவது குறித்து ஐ.தே.க.மனு சனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்ககுமாரதுங்கவிற்கு கோரிக்கை மனு ஒன்றை நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற சுனாமி அனர்த்தத்தில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பாக தேசிய மட்டத்தில் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பான பிரேரணையையே அது சனாதிபதிக்கு அனுப்பிவைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கான சிறிகோத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத்தீர்மானத்தின்படி எதிர் வரும் பன்னிரெண்டு மாதங்களில் இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் எதிர் வரும் ஆறு மாதங்களுக்குள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள் குடியேற்றத்திட்டம் எதிர்வரும் 12 மாதங்களுக்குள் இலங்கையினுடைய மீனவத்துறை மற்றும் சுற்றுலாத் துறையை புனரமைத்தல் என்ற அடிப்படையில் அரசாங்கம், அரச சார்பற்ற அமைப்புக்கள் மதகுருமார் மற்றும் ஏனைய அமைப்புக்களை உள்ளடக்கிய வேலைத் திட்டம் ஒன்று நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இத் தீர்மானங்கள் சனாதிபதியின் பரிசீலனைக்காக அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# புனர் நிர்மாணப் பணிகளுக்கு அரசு கணக்கு ஆரம்பிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் புனர்நிர்மாணப்பணிகளை மேற்கொள்வது தொடர்பாக உரிய கணக்கு ஒன்றை ஆரம்பித்து அதனூடாக புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்கூட்டத்தின் போது வடக்குக் கிழக்கு அகதி முகாம்களை இராணுவத்தினர் நிர்வகிப்பது தொடர்பாக சனாதிபதி கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனானும் தன்னுடன் கலந்துரையாடியுள்ளதாகக் கூறினார். இக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் கருஜெயசூரியவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம் மற்றும் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பல கட்சித்தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இவர்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகள் உள்ளிட்ட ஏனைய பகுதிகளில் உள்ள அகதி முகாம் நிவாரணப் பணிகளில் இராணுவம் தலை[illegible]யிடுவதென்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன் றெனவும்,

நிவாரணங்களை உரிய முறையில் வழங்குவதற்கு இது சரியான நடவடிக்கை எனவும் கூறியுள்ளனர்.

ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச கேட்டுக் கொண்டதற்கிணங்கவே சனாதிபதி தலைமையில் புனர்நிர்மாணம் தொடர்பான கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.

# நிவாரணப்பணிக்கு அனுப்பப்பட்ட வானூர்திகளில் அமைச்சர்கள் சவாரி

### 'ராவய' பத்திரிகை தகவல்

(கொழும்பு)

'சுனாமி' அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணி செய்யவென வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் பல வானூர்திகளில் அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் சவாரி செய்து வருவதாக ராவய பத்திரிகை கூறுகிறது.

இதனால் எரிபொருள் செலவு பல மடங்காக அதிகரித்துள்ளதாக சிறிலங்கா வான்படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி அது செய்தி வெளியிட்டுள்ளது.

### கண்டெடுப்பு

முல்லைத்தீவு தண்ணீரூற்று முள்ளியவளையைச் சேர்ந்த தங்கத்துரை கணேசலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல 511890098V) கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். (சோ)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை 09.01.2005
2005ஆம் ஆண்டிற்கான உறுப்புரிமையைப் புதுப்பித்தல் தொடர்பான

## அறிவித்தல்

எமது சங்கத்தில் அங்கத்துவர்களாக இணைந்து 31.12.2004 உடன் உறுப்புரிமை காலாவதியாகும் அங்கத்துவர்களையும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களையும் எதிர்வரும் 31.01.2005 இற்கு முன்னர் எமது பிரிவுக் காரியாலயங்களிலோ, அல்லது மாவட்டக் காரியாலயத்திலோ உரிய அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பிக்கவும், புதிதாக இணைந்து கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

க.கணேஸ்
கௌரவ செயலாளர்.

(சி.11069)



## பண்டிகைக் கால பரிசு மழை!




முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20கிராம், 10கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக்குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற MMBL உப முகவர்கள் ஊடாகப் பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரைத் தொடர்பு கொள்ளுங்கள் 011-2372333

ரூபாய் 250,000 இற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்

AUTHORISED AGENT

WESTERN UNION
பணப்பரிமாற்றம்

நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
இச்சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப்பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

MMBL
Money Transfer(PVT) LTD
300,Galle Road, Colombo-03
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic

(சி-11121)


# ஈழநாதம் மக்கள் நாளேட்டின்

## ஆண்டு மலருக்கான ஆக்கங்கள்

ஈழநாதம் மக்கள் நாளேடு எதிர்வரும் 19.02.2005 அன்று 16 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதனை முன்னிட்டு வெளிவரவுள்ள ஆண்டு மலரில் பிரசுரிப்பதற்கு

- சிறுகதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்

என்பன ஆக்ககர்த்தாக்களிடமிருந்து கோரப்படுகின்றன

- ஆக்கங்கள் சமூக,அரசியல்,பொருளாதார,விஞ்ஞானத் துறைகள் சார்ந்தவையாகப் பரந்துபட்ட தளத்தில் ஆக்கப்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.
- ஆக்கங்களை 30.01.2005 இற்கு முன் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் கிடைக்கக் கூடியவாறு நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.
- அனுப்புபவர்கள் தமது தெளிவான அஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்.

ஆசிரியர்,
ஈழநாதம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# நக்சலைட்டுகள் பாவித்த வெடிமருந்துப் பெட்டிகளில் பாகிஸ்தான், பிரிட்டன் நாடுகளின் முத்திரைகள்

-இந்திய உளவுத்துறை தீவிரவிசாரணை

(புதுடில்லி)

**சட்டீஸ்கார் மாநிலத்தில் நக்சலைட்டுக்கள் பதுங்கியிருந்த இடத்திலிருந்து வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட வெடிமருந்துகளின் வெற்றுப் பெட்டிகள் ஏராளமான அளவில் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றில் பிரிட்டன் மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் முத்திரைகள் பொறிக்கப்பட்டிருந்தன. இதன் மூலம் இந்தியாவிலிருக்கும் நக்சலைட்டுக்களுக்கு சர்வதேச அளவில் தொடர்பு இருப்பது முதன் முறையாக அம்பலமாகியுள்ளது.**

சட்டீஸ்கார் மாநிலம் பல்ராம்பூர் மாவட்டத்தில் இந்திராகோரி என்ற இடத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகத் தகவல் வந்தது. இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த இடத்தைப் பொலிசார் சுற்றி வளைத்தனர். நக்சலைட்டுகளுக்கும் பொலிசாருக்கும் இடையே கடும்சண்டை நடந்தது. இதில் ஒரு பொலிஸ் அதிகாரியும் மற்றும் இரண்டு பொலிஸ்காரர்களும் பலியாயினர். சண்டையின் முடிவில் நக்சலைட்டுக்கள் தப்பியோடிவிட்டனர். பின்பு அந்த இடத்தை பொலிசார் சோதனை போட்ட போது 300 இற்கும் அதிகமான வெற்றுப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன.

பயங்கரமான வெடிபொருட்கள் வைக்கும் அந்த வெற்றுப் பெட்டிகளில் வெளிநாட்டு முத்திரைகள் இருந்தன. அவை குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் பிரிட்டனில் தயாரிக்கப்பட்டவை என்பதைப் பார்த்து பொலிசார் அதிர்ச்சி அடைந்தனர். இவை அனைத்தும் எவ்வாறு சட்டீஸ்காருக்கு வந்து சேர்ந்தது என்பது குறித்து மாநில உளவுத்துறை பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதன்மூலம் இந்தியாவில் உள்ள நக்சலைட் அமைப்பினருக்குச் சர்வதேச அளவிலான தொடர்பு உள்ளது அம்பலமாகியுள்ளது. மேலும் நக்சலைட்டுக்களைப் பயன்படுத்தி இந்தியாவிற்குள் சதி வேலைகள் நடத்த வெளிநாட்டு சக்திகள் திட்டமிட்டு இருப்பதும் தெரியவந்துள்ளது.

## தமிழக அரசு மீது பா.ஜ. கட்சி புகார்

(புதுடில்லி)

விஜயேந்திரர் கைது தொடர்பாக பா.ஜனதாத் தலைவர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தமிழக அரசு மீது புகார் தெரிவித்தனர்.



கர்நாடக மாநிலம் அல்மாட்டி அருகே கால்வாய்க்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான பேருந்து

# காஞ்சி சங்கர மடத்தின் இளைய மடாதிபதி விஜயேந்திரர்25 ஆவது சந்தேக நபராகக் கைது!



(சென்னை)

சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி சங்கர மடத்தின் இளைய மடாதிபதி விஜயேந்திரர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட அவர் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இவர் கொலைச் சம்பவத்தில் 25ஆவது சந்தேக நபராகும்.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் நிர்வாகி சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் கடந்த நவம்பர் 11ஆம் திகதி ஆந்திரா மாநிலம் மெகபூப் நகரில் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அவரை உச்ச நீதிமன்று நேற்று முன்தினம் நிபந்தனைப் பிணையில் விடுதலை செய்தது. இதற்கிடையே இந்தக் கொலை வழக்குத் தொடர்பாக காஞ்சிஇளையமடாதிபதி விஜயேந்திரருக்கும் தனிப்படை பொலிசார் கட்டளை அனுப்பி அவரை வரவழைத்து 2 முறை விசாரணை நடத்தினார்கள்.

இதனால் விஜயேந்திரர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

நேற்று முன்தினம் ஜெயேந்திரரை உச்ச நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்த மகிழ்ச்சியில் காஞ்சி சங்கர மட ஊழியர்கள் இருக்க, மாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆயுதம் தாங்கிய 70 பொலிசார் சங்கர மடத்திற்குச் சென்றனர். அப்போது விஜயேந்திரர் பூஜையில் இருந்தார். விஜயேந்திரர் பூஜையை முடித்துவிட்டு எழுந்து வந்ததும் அவரை தனிப்படை பொலிசார் கைது செய்தனர். முன்னதாக விஜயேந்திரர் தனது வாகனத்தில் ஏறும் போது அவரது கைது பற்றிக் கேட்டதற்கு இது எதிர்பார்த்த ஒன்றுதான் என்று மெல்லிய குரலில் பதில் அளித்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் வழக்கம் போல் விளக்கமறியலின் போது கேட்க வேண்டிய கேள்விகளை மாஜிஸ்திரேட்டு கேட்டார். பொலிசார் துன்புறுத்தினார்களா? உடலில் காயங்கள் உள்ளதா? என்ற கேள்விகள் கேட்கப்பட்டன. அதற்கு விஜயேந்திரர் பதில் அளித்தார்.

பின்னர் காஞ்சிபுரம் சிறையில் விஜயேந்திரரை அடைக்க வேண்டும் என்றும், அதிகாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை மார்கழி பூஜைக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் விஜயேந்திரர் தரப்பில் வக்கீல்கள் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் அரசு வக்கீல் கேசவன் அதற்கு கடுமையான ஆட்சேபம் தெரிவித்தார். எனவே விஜயேந்திரரின் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை. பின்னர் மாஜிஸ்திரேட்டு உத்தமராஜ் வருகிற 24ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் விஜயேந்திரரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து விஜயேந்திரர் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டு சென்னை மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

—ஒரிசாவில் உபரியாக மின்சாரம் இருந்தும்—

# மண்ணெண்ணெய் விளக்கையே 72.10 சதவீதமான மக்கள் நம்பியுள்ளனர்

ஒரிசாவில் 72.10 சதவீத வீடுகளில் வசிப்போர் தங்கள் வீட்டில் இருளை விரட்ட மண்ணெண்ணெய் விளக்கையே நம்பி இருக்கின்றனர்.

2001 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி ஒரிசா மாநிலத்தில் உள்ள மொத்த வீடுகளில் 26.91 சதவீத வீடுகளே மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன எனத் தெரிய வந்துள்ளது. இது தேசிய அளவில் உள்ள சராசரியான 55.85 சதவீதத்தில் பாதி குறைவு. 0.46 சதவீத மக்கள் விளக்குகள் எதையும் பயன்படுத்துவதில்லை சூரியன் மறைந்தவுடன் பறவைகளைப் போல தூங்கச் சென்று விடுகின்றனர். 0.53 சதவீதம் மக்கள் வீடுகளில் வெளிச்சத்திற்கு மண்ணெண்ணெய் விளக்கையோ அல்லது மின் விளக்கையோ பயன்படுத்துவதில்லை. வேறு விதத்திலேயே அவர்கள் வெளிச்சத்தை உருவாக்குகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது.

ஒரிசாவின் தென் பகுதியில் உள்ள மாவட்டம் நவ்ரங்பூர் இங்கு மொத்தம் 3லட்சத்து 11 ஆயிரத்து 979 வீடுகள் உள்ளன. இத்தனை பேர் மின்சாரம் இல்லாமல் இருளில் அவதிப்படக் காரணம் மாநில அரசின் அலட்சியமே என பொது நல அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன. தேவைக்கு அதிகமாகவே இந்த மாநிலத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. அது மட்டுமன்றி மின் சீர் திருத்தத்தை அமுல்படுத்திய முதல் மாநிலமும் ஒரிசாவே ஒரிசா மாநிலத்தில் உபரியாக உள்ள மின் சாரம் அண்டை மாநிலங்களுக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் வழங்கப்படுகின்றது. அதே நேரத்தில் சொந்த மாநிலத்தில் உள்ள மக்களை அந்த மாநில அரசு இருளில் வாழ வைத்துள்ளது என்பதே துரதிர்ஷ்டமான விஷயம்.


## அறிவித்தல்

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்ட நிதிக்காக 31.12.2004 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த "சந்தோசம்" அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு சுனாமி கடல் பேரலை காரணமாக அதிர்ஷ்டம் பார்க்கப்படவில்லை. இச்சீட்டிழுப்பு புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மைதானத்தில் 15.02.2005 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அன்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் எல்லோருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

**தகவல் :- சமுதாய முன்னேற்ற நிலையம்,**
**தலைமைச் செயலகம்,**
**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

(சி.11184)


# வரி சீரமைப்பு, பணவீக்கம் குறித்து பொருளாதாரக் குழு ஆலோசனை

(புதுடில்லி)

வரிசீரமைப்பு, பணவீக்கம், வேலைக்கு உத்தரவாத திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவை குறித்து பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழு டில்லியில் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியது.

பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு பொருளாதார விவகாரங்களில் ஆலோசனை வழங்க கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி மத்திய அரசு ஒரு குழுவை அமைத்தது. ஆந்திர முன்னாள் கவர்ணர் சி.ரங்கராஜன் இதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இக்குழுவின் முதற்கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. பின்னர் ரங்கராஜன் நிருபர்களிடம் கூறுகையில், வரும் மத்திய பட்ஜட்டில் மேற்கொள்ள வேண்டிய பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து கூட்டத்தில் விவாதித்தோம். குறிப்பாக விலைவாசி நிலவரம் வரிசீர்திருத்த நடவடிக்கைகள் பணவீக்கம் வேலைக்கு உத்தரவாதத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் பற்றி ஆழமான விவாதங்கள் நடந்தன. பொருளாதார நிலை தொடர்பாக மாதந்தோறும் பிரதமருக்கு நாங்கள் அறிக்கை சமர்ப்பிப்போம். எங்கள் பணி நிதியமச்சகத்தையோ அல்லது திட்ட கமிஷன் நடவடிக்கைகளிலோ குறுக்கிடுவதாக இருக்காது. மாறாக இணைந்து பணியாற்றுவோம். நாங்கள் வழங்குவது ஆலோசனை மட்டும் தான். அரசு தான் இவற்றில் இறுதிமுடிவெடுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கொண்டது என்றார்.


## துயர் பகிர்கின்றோம்


**திரு.திருநாவுக்கரசு மயில்வாகனம்.**

தமிழீழ சுகாதார சேவைகளின் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களின் பொறுப்பாளரான திரு.புனிதன் அவர்களின் தந்தையார் திருநாவுக்கரசு மயில்வாகனம் அவர்கள் 10.01.2005 அன்று காலம் சென்ற செய்திகேட்டு மிகுந்த கவலையடைந்துள்ளோம். துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர்,போராளிகள்,**
**பணியாளர்கள், தமிழீழ**
**சுகாதார சேவைகள்**

(சி.11071)

# ரசிகர்களுக்கிடையில் கைகலப்பு கால்பந்துப்போட்டி கைவிடப்பட்டது




ரசிகர்கள் கலவரம் காரணமாக கிரிஸ் நாட்டில், கழகக் கால் பந்துப்போட்டி இரத்துச் செய்யப்பட்டது.

கிரிஸ் நாட்டில் உள்ளூர் அணிகள் மோதும் கால்பந்துப்போட்டிகள் நடந்து வருகின்றன. முன்னணி அணிகளான ஒலிம்பியாகஸ் பைராயஸ், பனியானியஸ் எதென்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி எதென்ஸ் நகரில் நேற்று முன் தினம் நடப்பதாக இருந்தது. கடந்த ஞாயிறன்று இரவு ஒலிம்பியாகஸ் அணியின் ரசிகர்கள் பெருங் கூட்டமாகத் திரண்டு வந்து அரங்கில் கலவரம் செய்தனர். அவர்களுக்கும், அங்கு கூடியிருந்த பனியானியஸ் அணி ரசிகர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. பொலிசார் துரிதமாக நடவடிக்கை எடுத்து கலவரத்தைக் கட்டுப்படுத்தினர். இந்தச் சம்பவத்தில் பத்துப் பொலிசார் காயமடைந்தனர். திடீர் கலவரத்தை அடுத்து, போட்டி இரத்துச் செய்யப்பட்டது. மீண்டும் எப்போது நடத்தப்படும் என்ற விபரம் அறிவிக்கப்படவில்லை.



மாட்ரிட்டில் நடந்த 'ஸ்பானிஷ்' கால்பந்துப் போட்டியில் ரியல் மாட்ரிட் அணி 3-0 என்ற கோல் கணக்கில் அட்லெடிகோ டி மாட்ரிட் அணியை வீழ்த்தியது. எதிரணி வீரர்களை ஏமாற்றிய ரியல் மாட்ரிட் அணி வீரர் ரொனால்டோ கோல் அடிக்கிறார்.

## முதல்தர வீரர் ரோஜர் பெடரரும் ஒருநாள் தோல்வியைச் சந்திக்க நேரிடும் -ஹெவிட்



டோகாவில் நடைபெற்ற கட்டார் ஓபன் டெனிஸ் போட்டியில் ஐவன் ஜுபிசிக்கை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிய முதல்தர டெனிஸ் வீரர் றோஜர் பெடரரின் திறமையை ஏற்றுக் கொண்டாலும் பெடரரும் ஒரு நாள் தோல்வியைச் சந்திக்க வேண்டிவரும் என லெய்ட்டன் ஹெவிட் தெரிவித்துள்ளார். கடந்த 2004 ஆம் ஆண்டிலும் சிறந்து விளங்கிய பெடரர் இம் மாத முதல் வாரத்தில் நடைபெற்ற கட்டார் ஓபன் போட்டியையும் வென்று சாதனையை தொடர்ந்துள்ளார்.ஹெவிட்டும் 2004ஆம் ஆண்டில் சிறந்த டெனிஸ் வீரராக மிளிர்ந்தார். அவர் சிட்னியில் நேற்று (செவ்வாய்) ரேடிக் ஸ்ரியனக்கைச் சந்தித்தார்,

ஹெவிட் 17ஆவது இடத்திலிருந்து 3ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார், இவர் கடந்த 3 இறுதிப் போட்டிகளில் பெடரரிடம் தோல்வி கண்டார்.ஹெவிட் இதுபற்றி தெரிவிக்கும்போது பெடரர் மட்டுமே தன்னை வெற்றி கொண்டவர் என்று கூறியுள்ளார்.

# சுனாமியால் அழிவுற்ற பாடசாலைகளைச் சீர்செய்ய சர்வதேச மெய்வல்லுநர் சங்கம் பெருந்தொகை நிதியுதவி

இலங்கையில் சுனாமி அலை பாதிப்பினால் ஏற்பட்ட பாடசாலைகளைப் புனரமைக்கவென பல உதவிகளைச் செய்ய சர்வதேச மெய்வல்லுநர் சங்கம் முன் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத்திட்டம் பற்றி சர்வதேச மெய் வல்லுநர் சங்கத் தலைவர் லமைன் டயக்கிடம் சிறிலங்கா மெய்வல்லுநர் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. அதற்கேற்பவே ஏனைய பாதிப்படைந்த நாடுகளின் தேவைகள் பற்றியும் I.A.A.F விபரம் கேட்டிருக்கின்றது. இதனைவிட மேலும் பல நாடுகளின் மெய்வல்லுநர் சங்கங்களும் உதவி வழங்கும் முயற்சியில் இணைந்துள்ளன.

அதன்படி சர்வதேச கோல்ப் சங்கம் முதற் கட்டமாக 50 ஆயிரம் பவுணை வழங்க முன்வந்துள்ளது.


அத்துடன் பல ஐரோப்பியப் பெண்கள் கோல்ப் விளையாட்டு சங்கங்களும், தாய்லாந்து பெண்கள் கோல் சங்கமும், அயர்லாந்து கோல் சங்கமும் உதவ முன்வந்துள்ளன.

அடுத்து உலகின் தலைசிறந்த மோட்டார் கார் ஓட்டப்பந்தய வீரர் மைக்கல் சூமேக்கர் 10 மில்லியன் டொலரையும்,அகில இந்திய உதைபந்தாட்ட சம்மேளனம் 18 ஆயிரம் பவுணையும் (1.5 மில்லியன் ரூபாய்), ஜேர்மன் உதைபந்தாட்ட சங்கம் 1.5 மில்லியன் யூரோவையும் வழங்க முன்வந்துள்ளன.

பேயான் முனிச் லீக் அணித்தலைவர் 3 இலட்சம் யூரோவை பாடசாலைகட்டவும், அநாதை விடுதிகள் அமைக்கவும் வழங்கியுள்ளனர். மஞ்செஸ்டர் யுனைட்டட் முதல்தர அணி வீரர்கள் அக் கழகங்கள் மூலம் திரட்டிய ஒரு இலட்சம் பவுணை வழங்கியுள்ளனர்.

இது போன்று ஜேர்மனிய டெனிஸ் வீரர் நிகளஸ் கீவ்பர் 100 டொலரை வழங்கியுள்ளதுடன் தாய்லாந்து வீரருடனான போட்டிகளில் கிடைக்கும் நிதியை தாய்லாந்தின் புகாட் மாநிலத்துக்கு வழங்குவதாகவும் இந்தியாவில் சென்னை ஓபன் டெஸ்ட் போட்டிகளில் கிடைக்கும் நிதியை இந்தியாவின் தமிழ் நாட்டுக்கும் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள டெனிஸ் போட்டிகளில் பெறப்படும். 34 ஆயிரம் பவுணை வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ள அதே வேளை மரியா சரபோவா தனிப்பட்ட ரீதியாக 5 ஆயிரத்து 200 பவுண்களைத் தாய்லாந்துப் பிரதமரிடம் வழங்கியுள்ளார்.இதேபோன்று றக்பி, நீச்சல், குதிரைப்பந்தயம் போன்ற போட்டிகளில் கிடைக்கும். நிதியை வழங்க முன்வருவது



டன் சீனாவின் 2008ஆம் ஆண்டின் ஒலிம்பிக் ஏற்பாட்டாளர்களும் 1,500 பவுண்களை 30 நிமிடங்களில் சேகரித்துள்ளனர்.

## சினிமாவில் நடிப்பது எளிதானது அதற்குத் திறமை தேவையில்லை

ஜடேஜா

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அஜய்ஜடேஜா சூதாட்டக் குற்றச்சாட்டுக்குப் பின்னர் தேசிய அணியில் இடம்பிடிக்கவில்லை. டில்லி அணிக்காக ஆடிவரும் ஜடேஜா நிருபர்களிடம் கூறுகையில், சினிமாவில் நடிக்க எந்தத் திறமையும் தேவை யில்லை. அச்சுறுத்தும் பந்துவீச்சு, ஆபத்தான சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளும் நெருக்கடி அங்கு இல்லை. கமராவுக்கு முன்பு நடிப்பது எளிதான காரியம். அதில் தயாரிப்பாளர் மனது வைத்தால் யார் வேண்டுமென்றாலும் நடிக்கலாம். ஆனால் கிரிக்கெட்டில் அப்படியில்லை என்றார்.







சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இரட்டையர் பிரிவில் ரெயினர் ஸ்கிட்லர் (இடது ஜேர்மனி), யென்ஹுசுன்லு (தைபே) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது

# சுனாமி நிவாரண நிதி கிரிக்கெட் சுமார் 100 கோடி நிதி திரண்டது



உலகின் தலைச் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் இணைந்து உலக 11 பேர், ஆசிய 11 பேர் எனப் பிரிந்து விளையாடினர். இதில் வெற்றி, தோல்வியை விட மிக முக்கியமான அம்சம், இந்த 22 வீரர்களும் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்துக்காக ரூ.100 கோடிஇந்திய ரூபாவைத் திரட்டிமைதான்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இந்தப் போட்டி திங்கட்கிழமை நடை பெற்றது. இது போன்ற போட்டி களுக்கு சாதாரணமாக அங்கீகாரம் கிடைக்காது.

ஆனால் மிக நல்ல பணிக்காக இரு குழுக்களாக உலக வீரர்கள் விளையாடும் இப் போட்டியை அங்கீகரித்தது சர்வதேச கிரிக்கெட் சபை. மொத்தம் இரண்டு போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டது. முதல் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இரண்டாவது போட்டி ஆசியாவில் நடைபெற உள்ளது. அதற்கான திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இப்போட்டிக்கான அனுசரணைகள் ஒவ்வொரு ஓட்டத்துக்கும் ரூ.33,470 உம் ஒவ்வொரு சிக்சருக்கும் ரூ.16,73,500-உம் வழங்குவதாக அறிவித்தன. அதன்படி அதிக நிதியை வசூலிக்கும் முகமாக அனைத்து வீரர்களும் அதிரடியாக விளையாடி ரூ.100 கோடியைத் திரட்டியுள்ளனர்.

இதன்படி இரு அணிகள் மூலம் அடிக்கப்பட்ட ஓட்டங்களால் மட்டுமே 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் கிடைத்தது.

உலக 11 பேர் அணி அடித்த 344 ஓட்டங்கள் மூலம் ரூ.2 கோடியே 14 இலட்சமும், ஆசிய 11 பேர் அணி அடித்த 232 ஓட்டங்கள் மூலம் 76 இலட்சம் ரூபாயும் வந்துள்ளது. ரிக்கிபொண்டிங் 3 சிக்சர் உட்பட 115 ஓட்டங்கள் குவித்தார். அதிகபட்சமாக இவர் மூலம் 88 இலட்சம் ரூபாய் நிதி கிடைத்துள்ளது.

டிக்கெட்விற்பனை உள்ளிட்டஅனைத்தும்சேர்த்து மொத்தமாக, சுமார் 100 கோடி ரூபாய் நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது.

தெற்கு ஆசியாவில் ஏற்பட்ட சுனாமி பேரழிவுக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச கிரிக்கெட் சபை ஐ.சி.சி 2 போட்டிகளை நடத்த முடிவு செய்தது. அதன்படி முதல் போட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பேர்ன் நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

# ரத்துச்செய்யப்பட்ட நியூசிலாந்துத் தொடரை ஏப்ரலில் மீண்டும் தொடர்கிறது சிறிலங்கா

சுனாமி காரணமாகப் பாதியிலேயே இரத்தான தங்கள் நியூசிலாந்துப் பயணத்தை இலங்கை கிரிக்கெட் அணி ஏப்ரல் மாதம் தொர்டர்கிறது.


டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணி கடந்த மாதம் நியூசிலாந்து சென்றது. அந்த நேரத்தில், சுனாமி காரணமாக இலங்கையில் பேரழிவு ஏற்பட்டது. உடனடியாக, தொடரை இரத்துச் செய்துவிட்டு இலங்கை வீரர்கள் நாடு திரும்பினர். இதனால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட, உலக 11 பேர் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நடத்த நியூசிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் முடிவு செய்திருக்கிறது

இது பற்றி நியூசிலாந்து கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி மார்ட்டின் ஸ்னீடன் அளித்த பேட்டியில்,"பாதியில் இரத்தான பயணத்தைத் தொடர இலங்கை அணி ஆர்வமாக இருக்கிறது. இரண்டு போட்டி



கள் கொண்ட டெஸ்ட் தொடராக விளையாடி முடிப்பது பற்றிப் பேசி வருகிறோம். ஏப்ரல் மாதம் இலங்கை அணி இங்கு பயணம் வரும். இதற்கிடையே, உலக 11 பேர் அணிக்கு எதிராக இம்மாத இறுதியில் ஒரு நாள் தொடர் நடத்தவும் முடிவு செய்திருக்கிறோம். ஷேன்வோர்ன், முத்தையா முரளிதரன்,லான்ஸ்குளூஸ்னர், ஆன்டி பிளவர்,ஹீத் ஸ்டீரிக் உட்படப் பலரும் இதில் பங்கேற்பார்கள்' என்றார்.

## சிந்தனைக்கு



காலங்காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள்- சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள்- சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக் கண்ணீர்- இவையெல்லாம் பௌத்த தேசத்தின் காருண்யத்தை தொட்டதாகத் தெரியவில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## ஒருபடி முன்நோக்கி.....!

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்சஅமரசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதம் குறித்து தமிழ் மக்கள் கவலை கொள்ளவோ அன்றி ஆத்திரங்கொள்ளவோ தேவையில்லை. ஏனெனில் சிறிலங்கா அரசாங்கத்தினாலோ அன்றி அரசாங்கத்தில் பங்குதாரிகளினாலோ இனவாத உச்சிக்குச் செல்லும்போது தமிழ்மக்களின் விடுதலையும் ஒருபடி முன்னேற்றம் காண்கின்றது. அதாவது நெருங்கி வருகின்றது.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சுனாமி பேரலையால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்குறித்தும் அவர்கள் அடைந்துள்ள துன்பம் குறித்தும் ஏற்றுக்கொள்பவராக இல்லை. அவை குறித்துச் சந்தேகம் கொள்பவராகவே உள்ளார். அதுமட்டுமன்றி தமிழ் மக்களுக்கான சர்வதேச நிவாரண உதவிகள் அளிக்கப்படுவதற்கு முட்டுக்கட்டை போடுபவராகவும் உள்ளார்.

ஜே.வி.பியினரும் சரி , அதன் தலைவரும் சரி இனவாதம் பேசுவதினாலோ அன்றித் தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணம் சென்றடையக் கூடாது எனத் தடை விதிப்பதனாலோ தமிழ் மக்களுக்கு சுனாமிப் பேரலையினால் விளைந்தது போன்ற பெரும் கேடு எதுவும் விளைந்து விடப்போவதில்லை. சர்வதேச நாடுகள் தமிழ் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் வழங்கிய நிவாரண உதவிகள் கிடைக்கப்பெறாது போகலாம்.

இது தமிழ் மக்களுக்கோ அன்றி விடுதலைப்புலிகளுக்கோ நிச்சயமாக ஏமாற்றம் அளிப்பதாக இருக்கமாட்டாது. ஏனெனில் இது இவ்வாறுதான் நடைபெறுமென எதிர்பார்க்கப்பட்டதொன்றுதான். இதன் காரணத்தினாலேயே தமிழ்மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் தமிழர் தரப்பிடமே பகிர்ந்தளிக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆகையினால் பகிர்ந்தளிக்கப்படவில்லை– தமிழ்மக்களுக்குரிய நிவாரணம் சென்றடையவில்லை என்ற நிலை ஏற்பட்டால் –உதவி வழங்கியோரிலும் தமிழருக்கும் சென்றடையவேண்டும் என்ற அபிப்பிராயம் கொண்டவர்கள் இருப்பின் (தமிழ்மக்களுக்கு நிவாரணங்கள் சென்றடைய வேண்டும் என்று அக்கறை கொள்ளாத நாடுகளும் உண்டு) அவர்களே தமது உதவிகள் சென்றடையவில்லை எனக் கவலை கொள்ள வேண்டும்.

ஆனால் சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் பெரும் அளவிலான நிவாரணப்பணிகள் வழங்கப்படுதால் வேண்டும் என்பது அவசியமானதே. ஆனால் அவை சிங்கள அரசால் கிட்டுமென தமிழர் தரப்பில் எவரும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை ஆனால் ஒன்று தமிழ் மக்கள் ஏதோஒருவகையில் பாதிப்பிற்குள்ளாகும் போதே–அதாவது சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறை முனைப்புப் பெறுகையிலேயே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் ஒருபடி மேலே செல்கிறது.

1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள மசோதாவைப் பாராளுமன்றத்தில் எஸ். டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்க கொண்டுவந்ததைத் தொடர்ந்து தான் தமிழர் தாயகத்தில் சாத்வீகப்போராட்டங்கள் முனைப்புப் பெற்றன. இதுவே எதிர்ப்புப் போராட்டத்தின் ஆரம்பப் படிநிலையாக இருந்தது.

அதன் பின்னர் 1972இல் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முதலாவது குடியரசு அரசியல்யாப்பை அறிமுகம் செய்ததை அடுத்தும் பல்கலைக்கழக அனுமதிக்கு இன விகிதாசாரத்தைக் கருத்திற்கொண்டு வெட்டுப்புள்ளியைத் தீர்மானிக்க முற்பட்டமையானது இளைஞர்களைப் போராட்டத்தில் நேரடியாக இறங்கவைத்தது. ஆயுதப்போராட்டம் குறித்த சிந்தனையும் வலுப் பெற்றது.

1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் மக்களைப் பார்த்து விடுத்த போரா? சமாதானமா? என்ற கேள்வியும் அவர் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிட்ட பெரும் இன வன்முறையும் தமிழ் மக்களின் தெரிவாக ஆயுதப்போராட்டம் என்பதையாக்கியது குறிப்பாக 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் இந் நிலையைத் திடமாக உறுதிசெய்தது.

இதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போரைத் தீவிரமாக்கியதன் விளைவு சுமார் ஆறு ஆண்டுகள் தொடர்ந்தும் பெரும் போர்நிகழக் காரணமாகியது. அதன் முடிவானது சர்வதேசத்தின் கவனம் பெருமளவில் இலங்கையின் பக்கம் திரும்பவும், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சர்வதேச மத்தியஸ்துவத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையை/ நிர்ப்பந்தத்தை உருவாக்கியது.

இந்தநிலையில் தற்பொழுது யுத்தத்தை விடவும் மிகவும் கோரமான முறையில் தமிழ் மக்கள் சுனாமி அலைகளினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சிங்களப் பேரினவாதம் இனவாதக் கூச்சல் போடுவதும், அவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் சென்றடைவதைத் தடுத்துவிட முற்படுவதும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியின் ஒரு குறிகாட்டியாகவே கொள்ளத் தக்கது. அதிலும் குறிப்பாக சர்வதேசத்தின் கவனம் இலங்கையின் பக்கமும் முழுமையாக இருக்கையில் இவ்வாறு ஜே.வி.பி நடந்து கொள்வது தென்பது தமிழர் தரப்பிற்கு பலம் சேர்ப்பதாகவே இருக்கும்.

ஆகையினால் சோமவன்ச அமரசிங்கவோ, விமல் வீரவன்சவோ தமிழ் மக்களுக்கு சர்வதேச உதவிகள் போய்ச்சேரக் கூடாது எனப் போடும் கூச்சலானது சர்வதேசம் இனப்பிரச்சினை விடயத்தில் விழிப்படையவும், உதவிகளை நேரில் வழங்குவது குறித்து ஆராயவுமே வழிவகுக்கும். அதாவது ஜே.வி.பியின் கூச்சலானது நிவாரண உதவிகள் கிட்டுவதில் இடையூறுகளைச் செய்யுமாயினும் தமிழ் மக்களின உரிமைகளுக்கான அங்கீகாரத்தை விரைந்து பெற்றுத்தர உதவுவதாகவே இருக்க முடியும்.

# தமிழர் தாயகத்தைப் புறக்கணிப்பதைக் கைவிட்டு நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும்

## அரசிடம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

தமிழர் தாயகப் பகுதிகளை புறக்கணிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டு சுனாமி பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களை மீளக்கட்டி யெழுப்புதல், நிவாரண உதவிகளை வழங்குதல் போன்றன நியாயமான முறையில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் வலியுறுத்தப் பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி கடற் பேரனர்த்தங்களால் தமிழர் தாயக பிரதேசங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பினும் அவற்றையெல்லாம் மூடிமறைத்து தமிழர் பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பான விபரங்களை மிகவும் குறைத்தே வெளியிட்டுவருகிறது. அத்துடன் ஐ.நா செயலாளர் கொபி அனானை தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவிடாது தடுத்து உண்மை நிலவரங்களைச் சர்வதேசத்தினர் அறியமுடியாது இருட்டடிப்புச் செய்துள்ளது.

இத்தனைக்கும் மேலாக பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களுக்கான நிவாரண உதவிகளை மட்டுப்படுத்துவதுடன் தாயகப் பகுதி அகதி முகாம்களையும், இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உதவிகளையும் இராணுவத்தினரிடம் ஒப்படைத்து மக்கள் வாழ்வில் இராணுவ தலையீட்டை ஏற்படுத்த முனைகின்றன.

எனவே இத்தகைய செயற்பாடுகளை அரசாங்கம் கைவிடுவது அவசியம் என வலியுறுத்தியுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இது குறித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. (33)

# இடம் பெயர்ந்தோர் முகாம்களை ராணுவமயப் படுத்தலுக்கு எதிர்ப்பு

## -போராட்டங்கள் வெடிக்கும் எனவும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''சுனாமி'' கடற்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் தமிழர் தாயகப்பிரதேச அகதி முகாம்களை சிறிலங்கா அரசு இராணுவ மயப்படுத்த முயல்வது தமிழ்மக்கள் பாரியளவிலான வெகுசனப் போரட்டங்களில் குதிக்க வழிசமைக்கும் என யாழ்.குடாநாட்டிலுள்ள பல்வேறு பட்டமக்கள் நலன்பேணும் அமைப்புக்களாலும் சிறிலங்கா அரசிற்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

சிறிலங்கா அரசதலைவர் சந்திரிகா "சுனாமி" கடற்பேரனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள அகதிமுகாம்களை இராணுவத்தினரிடம் ஒப்படைத்து அவர்களே பாதிக்கப்பட்ட மக்களுககான நிவாரண உதவிகளையும் வழங்குவார்கள் என அறிவித்துள்ளார்.

இந் நடவடிக்கையானது அரச படைகளது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் கிலி கொண்டு துயரப்பட்ட மக்கள் மீண்டும் ஒரு இயற்கைத்துயரத்தில் மூழ்கியுள்ள வேளையில் அரசு மக்களது வாழ்வில் மீண்டும் இராணுவத் தலையீட்டை நுழைத்துக் கொள்ள முனைவது மக்களது இயல்பு வாழ்விற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

இதனால் விசனம் கொண்டுள்ள மக்கள் மிகவும் விரக்தி அடைந்த நிலையில் உள்ளனர்.

எனவே அரசு அகதிமுகாம்களை இராணுவ மயப்படுத்தும் முயற்சிகளை உடனடியாகவே கைவிட வேண்டும் இல்லையேல் பாரியளவிலான மக்கள் போராட்டங்கள் தாயகப்பகுதிகள் எங்கும் வெடிக்கும் என எச்சரித்து, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழ் தேசிய விழிப்புணர்வுக்கழகம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைகழக ஊழியர் சங்கம், யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் என்பன கண்டனப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன. (33

# வடமராட்சி வடக்கில் மீளக்குடியேறுவோர் உணவுத் தேவையை நிறைவேற்ற முடியாதநிலை

“ சுனாமி” கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கின் கரையோரப்பகு திகளிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களில் கணிசமானவை மீளக்குடியமர்ந்து வருகின்ற நிலையில் அக்குடும்பங்கள் அன்றாட உணவுத்தேவைகளை நிறைவேற்றக்கூட முடியாததோர் சூழ்நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இது வரை காலமும் முகாங்களில் தங்கியிருந்த 400இற்கும் அதிகமான குடும்பங்கள் சக்கோட்டை, சுப்பர்டம், பொலிகண்டி மேற்கு, கொட்டடி மற்றும் வல்வெட்டித்துறைப்பகுதிகளில் மீளக் குடியேறி வருகின்றன.

எனினும் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்கான அனைத்தினையும் இழந்து நிர்க்கதியாக உள்ள அம்மக்கள் தமது அன்றாட உணவுத் தேவைகளை நிறைவேற்றக்கூட முடியாதிருப்பதாக நிவாரணப்பணியாளர்கள் கூறுகின்றனர்.

இதுவரையும் முகாம்களில் தங்கியிருந்து அவர்களிற்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வந்திருந்த நிலையில், மீள தமது வீடுகளில் குடியேறும் குடும்பங்களிற்கு இவ்வசதி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் அரச செயலகத்தினால் உறுதியளிக்கப்பட்டவாறு உலர் உணவு நிவாரணமோ அல்லது சமையலுக்கான பாத்திரங்களோ ஏதும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறு நாள்தோறும் பெருமளவிலான குடும்பங்கள் முகாமை விட்டு சொந்தஇடங்களில் குடியேற முற்பட்டுள்ள நிலையில் அவர்களிற்கான அடிப்படை வசதிகளைக்கூட இதுவரை ஏற்படுத்த அரசு முற்படவில்லையென மேலும் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

அவ்வாறானதோர் நிலை தொடர்ந்து நீடிக்குமிடத்து பாதிக்கப்பட்ட மக்கள் அரசிற்கெதிராக திரண்டெழுவதை தவிர்க்க முடியாதெனவும் அவ் வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன. (27)

# குச்சவெளி பிரதேச செயலர் அலுவலகம் மிதிவெடி அபாயத்தால் மூடப்பட்டது

'சுனாமி' அனர்த்தத்தை அடுத்து திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிப் பிரதேசத்தில் குச்சவெளிப் பிரதேச செயலர்அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் 16 மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன குடியிருப்புப் பகுதி. வைத்திய சாலைக்குப் பின்புறமாகவும் மிதிவெடிகள் காணப்பட்டு அகற்றப்பட்டன என்று திருகோணமலை மாவட்ட வெண்புறா அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன டேனிஷ் கண்ணிவெடிய கற்றும் குழுவினரே தண்ணீரினால் அடித்துச் செல்லப்பட்ட மிதிவெடிகளை அப்பிரதேசத்தில் அகற்றும்பணியை மேற்கொண்டுள்ளனர் குச்சவெளி கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் 22 மிதிவெடிகள் டேனிஷ் கண்ணிவெடிய கற்றும் குழுவினரால் அகற்றப் பட்டது. குச்சவெளிப் பிரதேசத்தில் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு இடம்மாறிக் கிடந்த மதிவெடிகளில் மூன்று மாடுகள் சிக்கிக் காயமடைந்தன என்று தெரிவிக்கபபட்டது.

மிதிவெடி அபாயம் காரணமாக குச்சவெளிப் பிரதேச செயலக அலுவலகம் நிலாவெளிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (25)

# திருமலை இந்து இளைஞர் பேரவை பாதிக்கப்பட்டோருக்கு உதவி

(திருகோணமலை)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி மற்றும், வேலூர் கிராமங்களைச் சேர்ந்த 230 குடும பங்களுக்கு லண்டன் தமிழ் அன்பர்களின் உதவிகளைப் பெற்று திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை சுமார் 3 இலட்சத்து ஐயாயிரம் ரூபா பெறுமதியான புதிய உடுப்புக்களை வழங்கினார்கள். லண்டனைச் சேர்ந்த என்.லோகேஸ்வரன், கொழும்பு டாக்டர் சரவானந்தன் ஆகியோரின் உதவியுடன் நிலாவெளி-அடம்போடையிலும், பெரிய குளம் பகுதியிலும் வைத்து இந் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் பேரவையின் பொதுச் செயலாளர் செ.சிவபாதசுந்தரம், பொருளாளர் ந.ரவீந்திரன், அமைப்புச் செயலாளர் சி.அபிமன்னசிங்கம் மற்றும் தொண்டர்களும் உடுப்புக்களைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார்கள். (25)

# சர்வதேச உதவிகள் தமிழர் தாயகத்திற்கு நேரடியாகக் கிடைக்க வழி உருவாக்குங்கள்

## - கொபி அனானிடம் கோரிக்கை

சர்வதேச உதவியில் தமிழ் சமூகத்திற்கென ஒதுக்கப்படும் பகுதியை நேரடியாக அவர்களிடம் கையளிப்பதற்கான வழி முறைகளை ஏற்படுத்துங்கள். ஒரு ஐ.நா வழியை உருவாக்குங்கள். இப்படிக்கோரிக்கைவிடுத்து ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு மகஜர் ஒன்றை சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப்பணியகம் அனுப்பி வைத்துள்ளது.

சமாதான மனித உரிமைப் பண்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் வண பிதா ஏ.ஐ.பேணாட் அனுப்பியுள்ள அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையரசின், நியாயத்திற்கு முரணான செயல் புதிதானதொன்றல்ல. இலங்கையின் சுதந்திரம் தொடக்கம், நாட்டின் வாழ்க்கையிலும்செழிப்பிழந்த தமிழ மக்களைப் புறந்தள்ளி வைக்கும் அரச கோட்பாட்டின் மேலுமோர் எடுத்துக்காட்டே இச் செயல்.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்குப் பகுதிக்கென குறிப் பாக ஒதுக்கப்பட்ட உதவிகளில், ஒருசில துளிகளே தமிழ் மக்களைச் சென்றடைந்தன. ஏனையவை வேறு நோக்கங்களுக்காக அரசினால் திசை திருப்பப்பட்டுள்ளன. இது யாவரும் அறிந்த உண்மையே.

இத்தகைய பின்னணியில் தற்போது இடம்பெறும் நிவாரணப்பணியின் பொறுப்பை அரச படையினரிடம் ஒப்படைப்பது பெருந்தவறாகும். அவர்களை அந்நியப் படையினராகவே தமிழ் மக்கள் நோக்குகின்றனர்.

எனவே, அது தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்துவதுடன், சமாதானத்தின் எதிர் காலம் மட்டில் பாரிய சேதத்தை உண்டாக்கும். ஈற்றில் வேறுசில நாடுகளிலிருந்து படையினர் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளமை குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. இவர்களுடைய வருகையின் நோக்கம் மனிதாபிமான உதவிப்பணியே என்று வெளிப்படையாகக் கூறப்படினும், மக்கள் அதை நம்பாது ஐயத்துடன் தான் பார்க்கின்றனர். அதற்குக் காரணமும் உண்டு.

ஏற்கனவே, சிக்கலானதும், மெதுவானதுமான அரசியல் நிலையை அது மேலும் சிக்கலாக்கக் கூடிய அபாயம் உள்ளது. பதிலாக, ஒரு ஐ.நா வழியை உருவாக்குவதே சிறந்தது.

நொருங்குண்ட எம்மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் மீள்குடியமர்த்தல், புனரமைத்தல் ஆகிய கட்டங்களுக்கு இத்தகைய ஐ.நா வழி அவசியமானதாயிருக்கும். எமது கோரிக்கைகளுக்கு அதிமுக்கிய கரிசனம் செலுத்துவீர்கள் என்று நம்பியுள்ளோம். இப்படி அந்த மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# இந்தியத் தூதுவர் நிருபமாசென் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமாசென் சுனாமி கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிடுவதற்காக நேற்றுக் காலை யாழ்.குடாநாட்டிற்குச் சென்றுள்ளார். விமானம் மூலம் பலாலியைச் சென்றடைந்த அவர், பின்னர் விமானப்படை உலங்கு வானூர்தி மூலம் வடமராட்சியின் கரையோரப்பகுதிகளில் சுனாமி கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டதாகக் கூறப்படுகின்றது.

பின்னர் அதே விமானப்படை உலங்குவானூர்தி மூலம் வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும் குடத்தனைப் பகுதிகளிற்குச் சென்ற அவர் அங்கு ஏற்பட்டுள்ள சேதங்களையும் பார்வையிட்டுள்ளார். இதனிடையே விசேட விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி உதவி நிவாரணப்பொருட்களை அவர் பருத்தித்துறைப் பகுதியில் இயங்கும் ஸ்ரீசாரதாசேவாச்சிரமத்தில் நேற்றுக் கையளித்துள்ளார்.பலாலியிலிருந்து ஆறு பாரவூர்திகளில் ஏற்றப்பட்ட இந் நிவாரணப்பொருட்கள் இராணுவப் பாதுகாப்புடன் தரைவழியாகக் குறித்த ஆச்சிரமத்திற்கு, முன்னரே எடுத்து வரப்பட்டிருந்தது. (27)

## சுனாமி...

ஏனெனில் பல குடும்பங்கள் இவ்வனர்ததம் காரணமாக வெளியிடங்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளார்கள். இருந்த போதும் விபரங்களைத்திரட்டும் வேலை இடம்பெற்று வரு கின்றது என அவர் குறிப்பிட்டார்.

மேலும் சிலாபத்தை பாடசாலை ஆசிரியை இந்திராதேவி வேலாயுதம்பிள்ளை என்பவரும் வட்டுவாகல் பாடசாலை ஆசிரியர் சுமதி-புஸ்பராசா என்பவரும் பலியாகியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தக் கொடிய அனர்த்தத் தால் மாணவர்களின் மனநிலை பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளது என அவர் கவலை தெரிவித்துள்ளார். (08)

# பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டியெழுப்ப 15600 பில்லியன் நிதியுதவி தேவை

## - நிதி உதவி வழங்கும் நாடுகளுக்கு அரசாங்கம் அறிக்கை

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப் படவுள்ள மீள்குடியேற்றப் பணிகள் தொடர்பான அறிக்கை ஒன்றை சிறிலங்கா அரசாங்கம் உதவி வழங்கும் நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.இதில் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப 15,600 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி தேவைப்படுவதாக சிறிலங்கா அரசு சுட்டிக்காட்டியுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சு ஆகியன கூட்டாக இந்த அறிக்கையினைத் தயாரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பகுதியில் வீடுகளை அமைப்பதற்கும் நிர்மாண பணிகளுக்கும் 400 மில்லியன் டொலர் தேவைப்படும் எனவும் அந்த குழுக்கள் மதிப்பிட்டுள்ளன. அரசாங்கம் 12 பெரிய நகரங்களையும் 20 மத்திய மற்றும் 30 சிறிய நகரங்களையும் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உளரீதியான..

உறவுகளையும் உடமைகளையும் இழந்தும் உளப்பாதிப்புக்களை சந்தித்திருக்கிறார்கள். இதன் காரணமாக தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது எமது மக்கள் சந்தித்த இழப்பிற்கேற்ற உளப்பாதிப்பு ஏற்படவில்லை, இருப்பினும் சிலருக்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக குழந்தைகளுக்கு, தாய்மாருக்கும் அதிகமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே இவர்களை மீட்பதற்கு எவ்வளவு விரைவாக உளவள நிவாரணங்களை வழங்கமுடியுமோ அதற்கேற்பவே அவர்களை பாதிப்பிலிருந்து மீட்கமுடியும், நாங்கள் பார்வையிட்ட மக்களில் பெரும்பான்மையானோர் பாதிப்பு குறைந்தவர்களாக உள்ள பொழுதும் குறிப்பிடத்தக்க அளவானோர் மனநோயாளர்களாக மாறும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனினும் இவர்களையும் அந் நிலையிலிருந்து மீட்க முயன்று வருகின்றோம். இதற்காக வன்னிப் பகுதியில் கிறிஸ்தவ மதகுருக்களால் பயிற்றுவிக்கப்பட்டஉளவளத்துணையாளர்கள் உள்ளனர். அவர்களை இச் செயற்பாட்டுக்கு ஈடு படுத்த திட்டமிட்டுள்ளோம். ஏற்கனவே நாம் ஆரம்பித்துள்ள உளவளப் பயிற்சிகளில் நல்ல முன்னேற்றங்கள் தென்படுகிறது. இனி மக்களை குழுக்களாக பிரித்து ஆலோசனைகளை வழங்கவுள்ளோம். அதாவது [illegible] தொடக்கம் 8 வயது வரையானோரை ஒரு குழுவாகவும் 8தொடக்கம் 12 வயதிற்குட்பட்டவர்களை ஒரு குழுவாகவும் 12 தொடக்கம் 15 இற்கு உட்பட்ட வயதுடையவர்களை ஒரு குழுவாகவும் இள வயதுடையவர்களை ஆண்கள் பெண்கள் என இரு குழுக்களாகவும் பிரித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளோம். எனினும் இப்பதிப்புக் குள்ளானவர்கள் மீள்வதாயின் ஏறத்தாள ஒரு வருட காலமாவதுஎடுக்கும். மேலும் குழந்தைகளை பொறுத்தவரை மீண்டும் இவ்வாறான அலை வருமா என்ற ஏக்கம் இவர்கள் மனதில் காணப்படுகின்றது. இதைவிட குடும்பங்களில் பல உறவினர்களை இழந்தவர்கள் தற்கொலை செய்யவேண்டுமென்ற உணர்வுடனும் உள்ளனர். இன்று நடந்த கலந்துரையாடலில் இவ் உளவள செயற்பாடுகளை கிழக்கு பகுதியிலும் நடைமுறைப்படுத்த வேண்மென எண்ணியுள்ளோம் இதற்கு நலவாழ்வுத்துறையினர் உதவுவதாக உறுதியளித்துள்ளனர். என குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர் கனகரத்தினம் அடிகளார் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற மேற்படி கலந்துரையாடலானது சுனாமி அலையின் தாக்கத்தினால் உளரீதியாக பாதிப்புக்களை அடைந்துள்ள மக்களை அந்நிலையிலிருந்து மீட்கும் முகமாக செயற்பட்டில் ஈடுபட்டு வருகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன கலந்து கொண்டன. இதில் உளவளம் ரீதியான செயற்பாடுகளை அனைத்து நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கான தீர்மானமும் எட்டப்பட்டது. (ச,கு)

## மனிதாபிமான...

ஆகவே, பொதுப்படையாகவே அதுவொரு பெரும் பாதிப்பாக எம்மாலும் தமிழ் மக்களாலும் உணரப்படுகின்றது.

ஏனெனில் இலங்கை அரசாங்கம் இணைந்து மனிதாபிமானப் பணியாற்றத் தயார் என்று அறிவித்துக் கொண்டு இருக்கின்றதே தவிர, ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை என்ற குறைபாட்டை ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம்.

அதை இன்னும் பாதிக்கும் வகையில் கொபி அனானின் பயணம் புறக்கணிக்கப்பட்டுள்ளது, தடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அது ஒரு பாரதூரமான விடயமாகத்தான் தமிழ் மக்களால் கொள்ளப்படுகின்றது.

கனேடியப் பிரதமரின் பயணம் என்பது மனிதாபிமான ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் சகல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

அந்த வகையில் கனேடியப் பிரதமருக்கு இன்னொரு பொறுப்பு இருக்கின்றது. கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் மூன்று இலட்சம் வரையான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அந்த வகையில் கனடா பிரதமர் இங்கு வருகின்றபோது தமிழ் மக்களுடைய மனங்களைப் பாதிக்காத வகையில் அவரது பயணம் இடம்பெற வேண்டும்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மக்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் அளித்துச் செல்வதை ஓர் அங்கமாகக் கொள்ள வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. தமிழ் மக்களின் விருப்பமும் அதுவே. இதுதொடர்பாக கனடா தூதரகம் மூலம் தமிழ்மக்கள் சார்பாக அழைப்பு விடுத்துள்ளோம். கனடா பிரதமர் தமிழர் பகுதிக்கு வருவார் என்று நம்புகிறோம் என்றார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்த மற்றுமொரு பேட்டியில் கூறியுள்ளதாவது:

எங்களைப் பொறுத்தவரை ஆழிப்பேரலைக்கு முன்னால் பேச்சுவார்த்தைகள், சமாதான முயற்சிகள் எல்லாம் இறுக்கம் அடைந்த ஒரு நெருக்கடியான நிலை காணப்பட்டது. சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை முன்னெடுக்காது தங்களுடைய அரசியல் அதிகாரத்தைப் பேணுகின்ற அதிகாரப் போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தது. ஆகவே, சமாதான முயற்சிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. ஆழிப்பேரலை பொதுவாக எல்லா இன மக்கள் மத்தியிலும் ஏற்படுத்திய பாதிப்பைப் பயன்படுத்தி, சிறிலங்கா அரசாங்கம் மனிதாபிமான கண்ணோட்டத்துடன் தமிழ்மக்களையும் புலிகளையும் பார்த்து அவர்களுடன் இணைந்து இந்த மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கும் என்ற எதிர்பார்ப்பு சகல மட்டத்திலும் இருந்தது. ஆரம்பத்தில் அதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால், எவ்வித நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத இடத்து குறிப்பாக சர்வதேச சமூகத்தின் உதவிகளை தெற்கிற்கு வழங்குகின்ற அளவை பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் வடக்குக் கிழக்கு பகுதிக்கு அதை பகிர்ந்தளிக்கும் எவ்வித முயற்சிகளும் இல்லாத காரணத்தினால், தமிழ்மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளார்கள். அந்த ஏமாற்றம் அடைந்த சூழலில் ஐ.நா செயலாளர் நாயகம் வருகின்றபோது அவர் இந்தப் பகுதிக்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவார், உதவிபுரிவார் என்று நம்பி இருந்த தமிழ் மக்களுக்கு ஐ.நா செயலாளரின் வருகையினைத் தடுத்த நடவடிக்கை ஏமாற்றம் அளித்துள்ளது. ஒட்டுமொத்தமாக நம்பிக்கையற்றிருந்த சமாதான முயற்சிகள் மீண்டும் துளிர்க்கும் என்ற நம்பிக்கைகள் எல்லாவற்றையும் சிதறடிக்கும் வகையில் சிறிலங்கா அரசாங்கத்தின் அண்மைய செயற்பாடுகள் அமைந்துள்ளன. '. விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தலைமைப்பீடம் தனது நிலைப்பாட்டை ஏற்கனவே தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. விடுதலைப்புலிகள் வலிந்து யுத்தத்தை திணிக்கமாட்டார்கள். சிறிலங்காப் படைகள் தமிழ் மக்கள் மீது வலிந்து போரைத் திணிக்க முயன்றால் மக்களைக் காக்க போரை எதிர்கொள்ள வேண்டிய கடப்பாடு புலிகளுக்குண்டு. அந்த வகையில் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் என்று ஒரு தரப்பின் நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு கூறமுடியாது. இரண்டு தரப்பின் நிலைப்பாடாக உள்ளது. ஆகவே இலங்கை அரசும் படைகளும் நடந்து கொள்கின்ற நடவடிக்கைகளை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தீர்மானிக்கலாம்.

## நிதி...

மேலும் தெரிவிக்கையில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பாக மக்களுக்கு தகவல்கள் வழங்கப்படவேண்டுமெனவும் அவர் சுட்டிக்கட்டியுள்ளார். இந்த நிதியுதவிகள் வைப்பிலிடப்பட்டு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனர்த்த காலத்தின்போது சர்வதேச சமூகம் வழங்குவதாகத் தெரிவிக்கும் நிதியுதவிகள் சில சந்தர்ப்பங்களில் அந்த அடிப்படையிலேயே கிடைக்கப்படுவதில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உரிய செயற்றிட்டங்களையும் முறையான ஒழுங்கமைப்புடன் நடைமுறைப்படுத்துவதே இலங்கைக்கு இங்குள்ள பாரிய சவால் எனவும் அவர் கூறினார். இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு சர்வதேச சமூகங்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் எனக் கூறிய உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் பீற்றர்ஹரோல்ட் உலகவங்கியின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவதாகவும் குறிப்பிட்டார்.

## மெல்போர்ன்...

எனத் தெரிவிக்கப்படவில்லை. இந்த நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார். நேற்றைய கூட்டத்திற்கு தலைமை தாங்கிய சனாதிபதி சர்வதேச நிறுவனங்களின் நிவாரண உதவிகளை தம்மால் கண்காணிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் தனது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார். உலக தரிசன நிறுவனம் ஆழிப்பேரலை நிதி உதவிகளைப்பயன்படுத்தி தமது மதத்திற்கு ஏனைய மதத்தவர்களை மாற்றும் முயற்சியில் ஈடுபடாமல் இருப்பதை துடுப்பாட்ட வாரியம் உறுதிப்படுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உப தலைவர் வணக்கத்திற்குரிய ஓமல்பே சோபித தேரர் துடுப்பாட்ட வாரியத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.